05.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அழிந்த காடுகளை உருவாக்க வனத்துறை சிறப்பு திட்டம்

கம்பம்:மரங்கள் வளர்ப்பில் கவனம் செலுத்தவும், அழிந்த காடுகளை உருவாக்கவும், காடுகள் அழிக்கப்படாமல் தடுக்கவும், மத்திய வன அமைச்சகம் பிறப்பித்துள்ள வழிகாட்டுதல்களின்படி, தமிழக வனத்துறை சிறப்பு திட்டம் தயாரித்துள்ளது.

தமிழகத்தில், மாநில காடு வளர்ப்பு திட்டம், தேசிய காடு வளர்ப்பு திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களின் கீழ் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. ஜப்பான் உதவியுடன் பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, மரங்கள் வளர்க்கப்படுகின்றன. சமீபத்தில் எடுக்கப்பட்ட சர்வேயில் தமிழக வனப்பகுதியில் மரங்கள் அதிக எண்ணிக்கையில் வெட்டப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.இது தொடர்பாக மத்திய வன அமைச்சகம் மரங்கள் வளர்ப்பு, காடுகளின் பரப்பை அதிகரித்தல் ஆகியவற்றில் தமிழக வனத்துறை தனிக்கவனம் செலுத்த வேண்டும் என அறிவுறுத்தி உள்ளது. இதற்கென வழிகாட்டுதல் நெறிமுறைகளை வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், தமிழக வனத்துறை தனித்திட்டம் தயாரித்து விரைவில் செயல்படுத்த முடிவு செய்துள்ளது.வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

வரும் 2020ம் ஆண்டுக்குள் நச்சுக்காற்றை 30 சதவீதம் குறைக்கவும், 2030ம் ஆண்டுக்குள் நம்மை சுற்றி நச்சு காற்றே இல்லாமல் செய்யவும் ஐ.நா.,விடம் இந்தியா உறுதி அளித்துள்ளது.

அதற்கு நாம் மரங்களை அதிகம் வளர்க்க வேண்டும். இதற்கேற்ற வகையில் காடுகளை பாதுகாக்க குழுக்கள் அமைக்கப்படும். குழுவில்

ஓய்வு பெற்ற வனப்பணியாளர்கள், இயற்கை ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் உட்பட்டோர் இடம் பெறுவர்.

அந்த குழுவினர் காடுகள் அழிக்கப்படுவதை தடுக்கும் முயற்சியில் ஈடுபடுவார்கள். விரைவில் இத் திட்டம் தொடர்பான நடவடிக்கை வனத்துறை சார்பில் துவக்கப்பட உள்ளது' என்றனர்

## மணிமுக்தா அணையில் மீன்பிடி திருவிழா



ரிஷிவந்தியம்:மணிமுக்தா அணையில் நடந்த மீன்பிடி திருவிழா, கோலாகலமாக நடந்தது.

விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் அடுத்த சூளாங்குறிச்சி மணிமுக்தா அணையில், மீன்வளத் துறை மூலம் மீன்கள் வளர்க்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.ஆண்டுதோறும், அணையில் வளர்ப்பு மீன்களை மீன்வளத் துறையினர் பிடித்த பின், சுற்று வட்டார மக்கள், அணையில் இறங்கி, மீன் பிடிப்பது வழக்கம். இந்நிகழ்வு, மீன்பிடி திருவிழாவாக நடந்து வருகிறது.

இந்தாண்டு, மீன்பிடி திருவிழா நேற்று நடந்தது. அணையின் நீர்மட்டம் முற்றிலும் குறைந்து, ஷெட்டர் பகுதியில் மட்டும் தண்ணீர் தேங்கி நிற்கிறது. 'அணையில் பொதுமக்கள் இறங்கி, மீன் பிடித்துக் கொள்ளலாம்' என தண்டோரா மூலம் கிராம பகுதிகளில் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, 20க்கும் மேற்பட்ட கிராம மக்கள், அணையில் மீன் பிடிப்பதற்காக, நேற்று

அதிகாலை, 5:00 மணிக்கே குவிந்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவரும், போட்டி போட்டு வலை மூலம் மீன் பிடித்தனர்.

இதில், கட்லா, ரோகு, மீனல், கெண்டை, கெளுத்தி என, பல்வேறு வகை மீன்களைப் பிடித்து, மூட்டை மூட்டையாக எடுத்துச் சென்றனர். இதனால், மணிமுக்தா அணை திருவிழாகோலமாக காட்சியளித்தது.

**திண்டுக்கல் கண்காட்சியில் கலக்கல்: கன மூக்கு சேவல் ரூ.2 லட்சம்**



திண்டுக்கல்:திண்டுக்கல்லில் 2வது நாளாக நடந்த சேவல் கண்காட்சியில், ரூ.2 லட்சம் மதிப்புள்ள சேலம் மல்லூார் 'கன மூக்கு' சேவல், தென் தமிழக

பாரம்பரிய 'கடக்கனாத்' சேவல் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

திண்டுக்கல் குட்டியபட்டியில் சேவல் வளர்ப்போர் சங்கம் சார்பில், 'கிளி மூக்கு, விசிறி வால்' சேவல் கண்காட்சி நேற்று துவங்கியது. நேற்று 2வது நாள் நிகழ்ச்சியில் 'கிளி மூக்கு, விசிறி வால்' ரகத்தை சேர்ந்த 160 சேவல்கள் பங்கேற்றன. இதில் சேலம் மல்லூரைச் சேர்ந்த வெள்ளைநிற 'கன மூக்கு' சேவல் ரூ.2 லட்சத்திற்கு பேரம் பேசப்பட்டது. ஆனால் அதனை விற்பனை செய்ய உரிமையாளர் மாணிக்கம் மறுத்துவிட்டார்.

பின், தென் தமிழக பாரம்பரிய இனமான 'கருங்கண் விழி, கருங்கால்களை கொண்ட 'கடக்கனாத்' சேவல் குடும்பம் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது அனைவரையும் கவர்ந்தது.ஒருங்கிணைப்பாளர் கவுரிசங்கர் கூறியதாவது: நம் தென் தமிழகத்தில் குறிப்பாக திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் பழநி, நத்தம் போன்ற பகுதிகள்தான் 'கிளிமூக்கு, விசிறி வால்' சேவல்களின் பிறப்பிடம். படிப்படியாக அவை மற்ற இடங்களுக்கும் மாறி வருகிறது. நம் பாரம்பரிய சேவல், கோழி ரகங்களை மீட்டெடுக்கும் முதல் முயற்சியே இந்த கண்காட்சி. இதற்கு அடுத்தாண்டு நல்ல வரவேற்பு இருக்கும் என நம்புகிறேன், என்றார்.

சேலத்தை சேர்ந்த மாணிக்கம்:நாற்பது ஆண்டுகளாக மல்லூரில் (சேலம்) பல்வேறு வகையான சேவல்களை அழகுக்காக வளர்த்து விற்று வருகிறேன். இங்கு கண்காட்சிக்கு வைத்திருப்பது கனமான மூக்கையும், தரையில் நின்றால் 3.6 அடி உயரம், வால் 5 அடி வரை வளரக்கூடிய தன்மை கொண்ட முழு நீள வெள்ளைநிற சேவல். கன மூக்கு சேவல்கள் எங்களிடம் அதிகம் உள்ளன.கம்பு, சோளத்துடன், அதிக புரதசத்துள்ள கடலைப்பருப்பை விரும்பி சாப்பிடும். எங்களிடம் ரூ.300 மதிப்புள்ள சேவல் குஞ்சுகள் முதல் ரூ.3 லட்சம் மதிப்புள்ள உயர்தரமாக வளர்க்கப்பட்ட சேவல்கள் வரை விற்பனைக்கு உள்ளன, என்றார்.

பாரம்பரிய 'கடக்கனாத்' சேவல் குடும்பம்:வேல்முருகன்: நம் பாரம்பரிய வீரத்தின் அடையாளம் கடக்கனாத் சேவல்கள். இதன் அடையாளம் கருநிறகண்கள், கால்கள்தான்.மிகுந்த ஆக்ரோஷம் கொண்டவை. சண்டையிட்டால் நிச்சயம் எதிராளி பலியாவது உறுதி. இந்த பாரம்பரிய சேவல்களின் விலை, அதன் வாழ்நாட்களின் அடிப்படையில் அமைந்துள்ளது இன்னும் சிறப்பு. பிறந்து ஒரு மாதமான சேவல் ரூ.500. நாட்கள் கூடக் கூட, ரூ.4 ஆயிரம் வரை விற்பனையாகிறது. தற்போது இணையதளத்தில் வாங்கக்கிடைக்காத இனமாக 'கடக்கனாத்' வகை சேவல்கள் உள்ளன, என்றார்.

## போடியில் மழை: 300 ஏக்கர் கத்தரி பாழ்



போடி:போடி பகுதியில் கத்தரிக்காய் விளைச்சல் அதிகம் இருந்தும்,தொடர் மழை காரணமாக செடிகளில் அழுகல் ஏற்பட்டு, விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

போடி பகுதியில் சிலமலை, சூலப்புரம், மொட்டுக்கோம்பை, மணியம்பட்டி உட்பட கிராமங்களில் 300 ஏக்கருக்கும் அதிக பரப்பில் கத்தரி விவசாயம் செய்யப்படுகிறது. விளைச்சல் அதிகமாக உள்ளது. இப்பகுதியில் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக விவசாய நிலங்களில் நீர் தேங்கி உள்ளது. இதனால் விளைந்த கத்திரிக்காய் முழுவதும் பூஞ்சாணம் பிடித்து அழுகல் ஏற்பட்டுள்ளது. ஏக்கருக்கு 4 டன்

கத்தரிக்காய் விளைச்சல் எடுக்க வேண்டிய விவசாயிகள் அழுகல் காரணமாக 2 டன் மட்டுமே எடுத்து வருகின்றனர்.

கத்தரிக்காய் கிலோ ரூபாய் 10 முதல் 12 வரை விவசாயிகளிடம் வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர். சில்லரையில் கிலோ ரூபாய் 20 முதல் 25 வரை விற்பனை செய்கின்றனர். இதனால், ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

## நெற்பயிருக்கு சவால் விடும் எலிகளால் கிலி! 'இடுக்கி'யுடன் காத்திருக்கும் விவசாயிகள்




மதுரை : மதுரையில் நெற்பயிர்களை சேதப்படுத்தி வரும் எலிகளால் பயத்துக்குள்ளான விவசாயிகள், 'இடுக்கி' மூலம் பிடித்து அழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அலங்காநல்லூர், பாலமேடு, கோட்டை பகுதியில் பல ஏக்கர் பரப்பளவில், நெல் விவசாயம் நடக்கிறது. இரு ஆண்டுகளாக பருவமழை பொய்ப்பால், விவசாயம் பாதிக்கப்பட்டது. தற்போது, நடப்பாண்டு மழையை எதிர்பார்த்து விவசாயம் செய்த விவசாயிகளுக்கு, சமீபத்தில்

பெய்த மழை மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.பெரும்பாலான பயிர்கள் பால் பிடிக்கும் பருவத்தை எட்டியுள்ளன. இதனால், எலி தொந்தரவு நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. மருந்துக்கும் கட்டுப்படாத எலிகளால் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். சில விவசாயிகள், நெற்பயிர்களை காப்பாற்ற கூலியாட்களை அழைத்து வந்து, இடுக்கி மூலம் எலிகளை பிடித்து அழித்து வருகின்றனர்.விவசாயி மாடக்குளம் பிரபாகரன்: கோட்டைமேட்டில் சூ ஏக்கர் நெல் விவசாயம் செய்கிறேன். எந்தாண்டும் இல்லாத அளவிற்கு இந்தாண்டு எலித்தொந்தரவு அதிகம். வெளியூர் ஆட்கள் மூலம் எலியை அழிக்க முடிவு செய்தேன். அவர்கள் விசேஷ முறையில் வடிவமைத்திருந்த 'இடுக்கி' மூலம் வலை விரித்து எலிகளை கொத்து...கொத்தாக பிடித்து சென்றனர். தினமும் ரூ.250 வீதம் கூலியாக கொடுத்தேன். இதுவரை 80 எலிகளை பிடித்துள்ளோம், என்றார். கோடிகளை விழுங்கும் எலிகள்மதுரை வேளாண் துறை நீர் மேலாண்மை பயிற்சி நிலைய ஆய்வறிக்கை சொல்வதென்ன:எலிகள் புத்தி கூர்மை, கூச்ச சுபாவம் கொண்டவை. சந்தேகப் பிராணி. சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படும் ஆற்றல் கொண்டவை. விவசாயிகளின் முதல் எதிரி. தோராயமாக 6 எலிகள் ஒரு மனிதன் உண்ணும் உணவை உண்டு அழிக்கின்றன. ஓராண்டில் 20 மடங்கு உணவு பொருட்களை உண்டு வீணாக்குகிறது என கண்டறியப்பட்டுள்ளது. மத்திய அரசின் புள்ளிவிபரம்மதுரை உட்பட நாடு முழுவதும் மத்திய அரசின் உணவு குடோன்களில் ஆண்டு தோறும் ரூ.58 ஆயிரம் கோடி உணவுப் பொருட்கள் எலிகளால் வீணாகின்றன. உணவு தானியங்கள் சாகுபடியாகும் மாநிலங்களில், வயல்களிலேயே எலிகளால் 15-20 சதவீதம் உணவுப்பொருட்கள் அழிகின்றன.

## சாமநத்தத்தில் சங்கமிக்கும் 10 ஆயிரம் பறவைகள்; அமையுமா சரணாலயம்

மதுரை : "மதுரை சாமநத்தத்தில் ஆண்டுதோறும் 10ஆயிரம் பறவைகள் முகாமிட்டு வருகின்றன. இவற்றை சரணலாயமாக அறிவிக்க அரசை வலியுறுத்து வருகிறோம்" என, இறகுகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவீந்திரன் பேசினார்.மதுரையில் இயற்கை பேரவை சார்பில் 'அறியப்படாத பல்லுயிர் வளம்' என்ற விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. நாணல் நண்பர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தமிழ்தாசன் வரவேற்றார். ராஜபாளையம் வனஉயிரின பாதுகாப்பு சங்க ஒருங்கிணைப்பாளர் சரண் முன்னிலை வகித்தார்.

ரவீந்திரன் பேசியதாவது: மாவட்டத்தில் 3 சதவீத அடர்ந்த காடுகள் உள்ளன. பல நுாறு ஆண்டுகளுக்கு முன்பு, மதுரை அருகே ஒரு புலியை சுட்டுக்கொன்றதாக ஆவணங்களில் உள்ளது. இன்றும் ஸ்ரீவில்லிபுத்துார் பகுதியில் புலிகள் நடமாட்டம் இருப்பதாக வனத்துறை தெரிவிக்கிறது.கடந்தாண்டு பறவைகள் பற்றி ஆய்வு நடத்தியதில், கஎ0 வகை பறவைகள் இங்கு முகாமிட்டிருப்பது தெரியவந்தது. சாமநத்தம் பகுதியில் ஆண்டுதோறும் 2 ஆயிரம் முதல் க0 ஆயிரம் பறவைகள் முகாமிடுகின்றன. இதனை பறவைகள் சரணாலயமாக அறிவிக்க, அரசை வலியுறுத்தி வருகிறோம்.பாலுாட்டிகள் பற்றி ஆய்வு செய்ததில், தமிழகத்தில் 178 விலங்குகள் வாழ்ந்தது தெரியவந்தது. முள் எலி, காட்டு முயல், சாம்பல்நிற அணில், பறக்கும் அணில், காட்டுப்பூனை, தேவாங்கு, குள்ளநரி போன்ற பாலுாட்டிகள் இப்பகுதியில் வாழ்ந்துள்ளன. இவற்றில் தேவாங்கு அழிந்து வரும் இனமாக உள்ளது.காட்டு மாடுகள், வரையாடுகள், காட்டுப்பன்றிகள், யானைகள் உசிலம்பட்டி

வனப்பகுதியில் வாழ்ந்ததாக குறிப்புகள் உள்ளன. வனங்களின் பரப்பளவு குறைந்ததால், விலங்குகளின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது. அரிதான பல விலங்குகள் இன்னும் ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அவற்றை பாதுகாக்க வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

**மானாவாரி நிலங்களில் விதைப்புப்பணி துவங்கியாச்சு! ஈரம் காய்வதற்குள் மழைக்கு எதிர்பார்ப்பு**

பொள்ளாச்சி: மழையைத் தொடர்ந்து மானாவாரி நிலங்களை உழுது, மண்ணில் ஈரம் காய்வதற்குள், விதைப்புப் பணியை முடிக்க விவசாயிகள் தீவிரமாகியுள்ளனர். கடந்த மூன்று மாதங்களாக, மானாவாரி நிலங்கள் மட்டுமின்றி பாசன நிலங்களும் பருவமழையை எதிர்பார்த்து, ஏமாந்து போயின. ஆற்றுப்பாசனம் மற்றும் வாய்க்கால் பாசனம் இருப்பதால், பொள்ளாச்சியின் தென்பகுதியில் உள்ள, ஆனைமலை பகுதியில் தென்னை சாகுபடி தப்பியது. அப்பகுதியில், மானாவாரி நிலங்கள் மிகவும் குறைவாக இருப்பதால், வறட்சியை காண முடியவில்லை.

ஆனால், பொள்ளாச்சி தெற்கு, வடக்கு மற்றும் கிணத்துக்கடவு பகுதிகளில், பல ஆயிரம் எக்டர் பரப்பளவு மானாவாரி நிலமாக உள்ளன. இந்நிலப்பரப்பில் ஏற்கனவே விதைக்கப்பட்ட பயிர்கள் போதிய மழையின்றி விளைச்சலை எடுக்க முடியவில்லை. ஆனாலும், கால்நடைகளுக்கு தேவையான தீவனம் மட்டும் சேகரித்து வைக்கப்பட்டன. வழக்கமாக இப்பகுதிகளில் சோளம், தட்டைப்பயிறு, துவரை, அவரை, நிலக்கடலை மற்றும் சில விவசாயிகள் பருத்தியும் சாகுபடி செய்துள்ளனர். மழையை எதிர்பார்த்து விதைத்த விதைகள்

முளைத்தும் மழை இல்லாததால், சாகுபடி பயிர்களின் வளர்ச்சி குன்றி, சிறு செடிகளிலேயே பூவும் பூத்து வாடி சாய்ந்த நிலைக்கு சென்றுவிட்டன. கடந்த இரு நாட்களாக, பொள்ளாச்சி தாலுகா பகுதியில் நல்ல மழை பெய்ததால், வாடி சாய்ந்த பயிர்கள் மீண்டும் நிமிர்ந்ததோடு, நிலத்துக்கு பசுமையை கொடுத்துள்ளன.

இது, விவசாயிகளுக்கும் திருப்தியை கொடுத்துள்ளது. தற்போது, வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள், கடந்த இரு நாட்கள் பெய்த திடீர் மழையால் ஈரமான நிலங்களை உழுது, மண்ணை பண்படுத்தி வருகின்றனர்.

பெரும்பாலான விவசாயிகள் உழுத நிலத்தில், சோளம், நிலக்கடலை, கம்பு மற்றும் கொள்ளு விதைப்பை மேற்கொண்டுள்ளனர்.

அடுத்த சில நாட்களில் துவங்கும் வடகிழக்கு பருவமழை மானாவாரி பயிர்களின் வளர்ச்சிக்கு கைகொடுக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய வேளாண் உதவி இயக்குனர் உமாராணி கூறுகையில், "ஏற்கனவே முளைத்த பயிர்களுக்கும், தற்போது விதைக்கும் உளுந்து, பாசிப்பயிறு, சோளம் மற்றும் தட்டைப்பயிறுக்கு இம்மழை கைகொடுத்துள்ளது. இனி வரும் நாட்களில் பருவமழை விவசாயத்தை ஊக்கப்படுத்தும், சிறுதானியங்களுக்கு இம்மழை மிகவும் ஏற்றது," என்றார்.

## விளைச்சல் போட்டியில் முதலிடம் பெறுபவருக்கு... ரூ.15,000 பரிசு:

வாலாஜாபாத்:நெல் மற்றும் வேர்க்கடலை பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக நடப்பாண்டில் விளைச்சல் போட்டியை, வேளாண் துறை அறிவித்து உள்ளது. இந்த போட்டியில், மாவட்ட அளவில், அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு, முதல் பரிசாக 15 ஆயிரம் ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்கு பெற விரும்பும் விவசாயிகள், அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குனர்களிடம் பதிவு செய்து கொள்ளலாம் என, வேளாண் அதிகாரி தெரிவித்து உள்ளார்.காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த ஆண்டு, 1.48 லட்சம் ஏக்கர் பரப்பில் நெல்லையும்; 9,880 ஏக்கர் பரப்பில் வேர்க்கடலையையும் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், நெற்பயிர் சாகுபடி மற்றும் நிலத்தடி நீர் மட்டத்தின் அளவு குறைவின் காரணமாக, விவசாயிகள் பயிரிடுவது பாதியாக குறைந்து விட்டது.இதை தவிர்க்கவும்; விவசாயிகளின் திறனை ஊக்குவிக்கும் விதமாகவும், ஆண்டுதோறும் அதிக விளைச்சல் போட்டியை வேளாண் துறை நடத்தியும்; முதல் மற்றும் இரண்டாம் இடம் பிடிக்கும் விவசாயிக்கு கனிசமான தொகையை வழங்கி ஊக்குவித்து வருகிறது.

நடப்பாண்டு சம்பா பருவத்தில் இருந்து, 31.3.16 வரையில், நெல் மற்றும் வேர்க்கடலை பயிரிடும் விவசாயிகளுக்கு, அதிக அளவில் மகசூல் பெற்று, மாவட்ட அளவில் முதல் இடம் பிடிக்கும் விவசாயிக்கு, 15 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்க உள்ளது. இரண்டாவதாக தேர்வு செய்யப்படுவோருக்கு, 10 ஆயிரம் ரூபாயும், என, மொத்தம் 25 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகையை, மாவட்ட வேளாண் துறை வழங்க உள்ளது.

போட்டி தகுதிகள்

* ஒரு விவசாயி எவ்வளவு ஏக்கர் நிலத்தில் வேண்டுமானாலும் பயிரிட்டு கொள்ளலாம்

* அவசியம் நீர் பாசனம் வசதி இருக்க வேண்டும்

* ஆண்டு முடிவதற்குள் எந்த பருவத்திலும் பயிர் செய்து கொள்ளலாம்

* சொந்த நிலமாக இருக்க வேண்டும்

* குத்தகை நிலமாக இருந்தால், அதற்கு உரிய சான்று பெற்றிருக்க வேண்டும்.இதுகுறித்து, வேளாண் இணை இயக்குனர் சீதாராமன் கூறுகையில், 'பயிர் விளைச்சல் போட்டி மாநிலம் மற்றும் மாவட்டம் ஆகிய இரு பிரிவுகளாக நடைபெற உள்ளது' என்றார்.

மேலும் 'இந்த போட்டியில் பங்கு பெற விரும்பும் விவசாயிகள், மாநில அளவில் பங்கேற்க, 100 ரூபாயும்; மாவட்ட அளவில் 50 ரூபாயும் நுழைவுக் கட்டணமாக, அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் செலுத்தி, போட்டியில் பங்கு பெறலாம்' என்றார்.

**வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்க...சேவை மையம்!:**

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்டத்தில், விவசாயிகளுக்கு, விதைப்பு முதல், அறுவடை வரை, அனைத்து வகைக்கும், சேவை மையம் மூலம், வேளாண் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு வழங்க, வேளாண் பொறியியல் துறை, முடிவு செய்துள்ளது. ஒரு மணி நேரத்திற்கு, 350 ரூபாய் கட்டணம் வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில், சொர்ணவாரி, சம்பா மற்றும் நவரை என, மூன்று பருவங்களில், 2.50 லட்சம் ஏக்கரில், நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் விதைப்பு, களை எடுத்தல், அறுவடை

போன்ற பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது.

மானிய விலையில்:விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையில், வேளாண் பொறியியல் துறை மூலம், நவீன இயந்திரங்கள் மானிய விலையில், விற்பனை செய்யப்படுகின்றன.

சிறு, குறு விவசாயிகள் அனைவரும், வேளாண் இயந்திரங்களை வாங்க இயலாத நிலையை கருத்தில் கொண்டு, குறைந்த வாடகையில், நவீன இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவில், குறைந்த எண்ணிக்கையில் இயந்திரங்கள் இருப்பதால், ஒவ்வொரு ஒன்றியத்திலும் விவசாயிகளுக்கு தேவையான, விதைப்பு முதல், அறுவடை வரையிலான வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடும் வகையில், வேளாண் இயந்திரங்கள் வாடகை மற்றும் பழுது நீக்கும் சேவை மையம் அமைக்கப்பட உள்ளது.

பரீட்சார்த்தமாக கடந்த ஆண்டு சோழவரம் ஒன்றியத்தில் துவக்கப்பட்டது.இதுகுறித்து வேளாண் பொறியியல் துறை பொறியாளர் ஒருவர் கூறியதாவது:இந்த ஆண்டு, ஈக்காடு (திருவள்ளூர்), கடம்பத்துார், எல்லாபுரம், கும்மிடிப்பூண்டி மற்றும் மீஞ்சூர் ஆகிய ஐந்து ஒன்றியங்களில், வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல் மற்றும் பழுது நீக்கும் சேவை மையம் அமைக்கப்பட உள்ளது. ஒவ்வொரு சேவை மையத்திற்கும், 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான, நவீன இயந்திரங்கள் வழங்கப்படும்.

இதை தனிநபர் அல்லது குழுவினர் அமைத்துக் கொள்ளலாம். மொத்த செலவில், 40 சதவீதம் அரசு மானியமாக வழங்கப்படும். மீதம் உள்ள 60 சதவீதத்தை, சேவை மையத்தை அமைப்பவர்கள் செலுத்த வேண்டும்.

பராமரிப்பு செலவு:இதற்காக நியாயமான வாடகையை விவசாயிகளிடம் பெற்று, அந்த பணத்தை பராமரிப்பு செலவிற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.வெளிச் சந்தையில், ஒரு மணி நேரத்திற்கு 700 ரூபாய் முதல், 900 ரூபாய் வரை, வாடகை வசூலிக்கப்படுகிறது.சேவை மையங்களில் 350 ரூபாய்க்கு, இயந்திரங்கள் வாடகைக்கு விடப்படும். ஆர்வம் உள்ள விவசாயிகள் திருவள்ளூர் மற்றும் பொன்னேரியில்

செயல்பட்டு வரும், வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களில் விண்ணப்பிக்கலாம்.

திருவள்ளூர் மாவட்டத்தில், மொத்தம் 14 ஒன்றியங்கள் உள்ளன. ஏற்கனவே, சோழவரத்தில் ஒரு சேவை மையம் செயல்படுகிறது. தற்போது அமைக்கப்படும் ஐந்து மையங்களை தவிர, மீதம் உள்ள எட்டு ஒன்றியங்களிலும், இதே போன்ற சேவை மையம் இந்த ஆண்டு இறுதிக்குள் அமைக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு மரக்கன்று இலவசமாக வழங்கல்

சேலம்: சேலம் பசுமை பாதுகாப்பகம், கடந்த, 2010ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், 90 லட்சம் மரக்கன்றுகள் தமிழகம் முழுவதும் நட்டு பராமரித்து வருகிறது. இந்நிலையில், சேலம் அரசு பொறியியல் கல்லூரி எதிரில் உள்ள பசுமை பாதுகாப்பக அலுவலகத்தில், சேலம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு, 5,000 மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது. விவசாயிகளுக்கு செம்மரம், தேக்கு, மகிலம், மலைவேம்பு, வேம்பு, புங்கன், அரசன் போன்ற மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. பசுமை பாதுகாப்பக நிறுவனர் பாலாஜி விவசாயிகளுக்கு வழங்கினார்.

## வாழப்பாடி மலைப்பகுதியில் விளாம்பழம் சீசன் துவக்கம்

வாழப்பாடி: ரத்த அழுத்தத்தை குறைத்து, இதயத்தை பலப்படுத்தும் மருத்துவ குணம் கொண்ட 'விளாம்பழம்' உற்பத்தி வாழப்பாடி பகுதி மலை கிராமங்களில் துவங்கியுள்ளது.

வாழப்பாடி அடுத்து, 30 கி.மீ., துாரத்தில், சேலம், விழுப்புரம், தர்மபுரி மாவட்டங்களை இணைக்கும் கல்வராயன் மலைத்தொடர் பரந்து காணப்படுகிறது. கல்வராயன் மலையில், 200க்கும் மேற்பட்ட கிராமங்கள் அமைந்துள்ளன. கல்வராயன்மலை மட்டுமின்றி,

வாழப்பாடியை சூழ்ந்துள்ள அருநூற்றுமலை, நெய்யமலை, சந்துமலை, ஜம்பூத்துமலை கிராமங்களிலும், வனப்பகுதிகளிலும், காடு வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மலையோர கிராமங்களிலும் விளாம்பழ மரங்கள் நிறைந்துள்ளன. ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே இயற்கை சூழலில் விளையும் விளாம்பழங்களில், இனிப்பு கலந்த புளிப்புச்சுவை நிறைந்திருக்கும். அதுமட்டுமின்றி, இந்த பழம் மலச்சிக்கலை தீர்ப்பதோடு, ரத்த அழுத்தத்தை குறைத்து, இதயத்தை பலப்படுத்தும் மருத்துவ குணம் கொண்டதாகும்.

ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் பூக்கும் விளாம் மரங்களில், புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பழங்கள் அறுவடைக்கு தயாராகிறது. தற்போது, வாழப்பாடி பகுதி மலை கிராமங்களிலும், வனப்பகுதியிலும் விளாம் பழங்கள் உற்பத்தி துவங்கியுள்ளது. வறட்சியிலும் இந்த பழம் விளையும் என்பதால் உற்பத்தியில் குறைவிருக்காது. அதனால், குறைந்த விலையில், மருத்துவ குணம் கொண்ட விளாம்பழம் கிடைப்பதால், மக்கள் விரும்பி வாங்கி சுவைத்து வருகின்றனர்.

## ஆடு வளர்ப்பு பயிற்சியில் இளைஞர்கள் விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்பு

பனமரத்துப்பட்டி: சேலம், சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், விவசாயம் சார்ந்த உப தொழில் துவங்க, பல்வேறு பயிற்சி அளிக்கப்படுகிறது. பரண் மேல் வெள்ளாடு வளர்ப்பது குறித்த ஒரு நாள் செயல்விளக்க பயிற்சி நடந்தது. ஆடு இனங்கள், அவற்றின் சிறப்பு தன்மை, வளர்க்கும் முறைகள், வளர்த்த ஆடுகளை சந்தைபடுத்துதல் குறித்து, வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீராம் விளக்கம் அளித்தார். தமிழகத்திற்கு ஏற்ற ஆடு இனங்களை தேர்வு செய்தல், குறைந்த செலவில் ஆடு வளர்க்க பரண் அமைத்தல், ஆடுகளை தாக்கும் நோய்கள், பூச்சி தொந்தரவுகள், அதை கட்டுப்படுத்தும் வழி முறைகள், ஆடுகளுக்கு குடல் புழு நீக்கம் செயலின்

முக்கியத்துவம், தடுப்பு ஊசி போடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து, கால்நடை உதவி பேராசிரியர் கோகிலா விளக்கினார். ஆடுகளை ஆரோக்கியமாக வளர்க்க கடைபிடிக்க வேண்டிய தீவன மேலண்மை, வேலி மசால், கினியாபுல், கம்பு, நேம்பியர் சுபாபுல் வளர்க்கும் முறைகள் குறித்தும், வேளாண் அறிவியல் நிலையத்தில் இருக்கும் மாதிரி பரண் மேல் ஆடு வளர்ப்பு திடல், மற்றும் இயந்திரத்தில் தீவனம் நறுக்கும் முறைகள் பற்றி, செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. பரண் மேல் ஆடு வளர்க்க, வங்கி கடன் பெறுவது, பரண் மேல் ஆடு வளர்த்த அனுபவம் குறித்து, ஆடு வளர்ப்பில் முன்னோடியாக விளங்கும் பெண் விவசாயி ஜெயலட்சுமி விளக்கினார். இப்பயிற்சியில், சேலம், நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த ஏராளமான விவசாயிகள், இளைஞர்கள் பயிற்சி பெற்றனர்.

## தொடர் மழை, லாரி ஸ்டிரைக்கால் காய்கறி விலை உயர்வு

பள்ளிபாளையம்: தொடர் மழை மற்றும் லாரி ஸ்டிரைக் காரணமாக சந்தைக்கு காய்கறி வரத்து குறைந்துள்ளதால், அதன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இது, பொதுமக்களை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

கடந்த சில வாரங்களாக, பள்ளிபாளையம் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் தொடர்மழை பெய்தது. அதனால், காய்கறிகள் சந்தைக்கு வரத்து வெகுவாக குறைந்துள்ளது. அதன் காரணமாக, காய்கறி விலை திடீரென உயர்ந்துள்ளது. 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளி, 25க்கும், 15 ரூபாய்க்கு விற்ற வெண்டைக்காய், 30க்கும், 20க்கு விற்பனை செய்யப்பட்ட பீர்க்கங்காய், 30க்கும், 25க்கு விற்ற புடலங்காய், 30 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. அதேபோல், மற்ற காய்கறிகளும், கிலோவுக்கு 5 முதல், 15 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. மேலும், கடந்த, 1ம் தேதி முதல், லாரிகள் ஸ்டிரைக்

நடப்பதால், வெளிமாநிலத்தில் இருந்த காய்கறிகள் வரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. அதனால், காய்கறி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே, திடீரென விலை உயர்ந்துள்ளது. லாரி ஸ்டிரைக் நீடிக்கும் பட்சத்தில், மேலும், தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு அதிகம் உள்ளது. இந்த விலை உயர்வு பொது மக்களை கடும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

இது குறித்து வியாபாரி நாகராஜ் கூறியதாவது: கடந்த சில வாரங்களாக தொடர் மழையால், சந்தைக்கு வரும் காய்கறி வரத்து, பாதியாக குறைந்து விட்டது. மேலும், லாரி ஸ்டிரைக்கால், பெங்களூருவில் இருந்து வரும் காய்கறிகளும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் காய்கறி, கிலோவுக்கு, 10 முதல், 20 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## வாய்க்காலில் நீர் குறைந்ததால் உழவு பணி பாதிப்பு

பள்ளிபாளையம்: வாய்க்காலில் தண்ணீர் வரத்து குறைந்ததால், கடைமடை வரை தண்ணீர் போய்சேரவில்லை. அதனால், அப்பகுதியில் உழவு பணி பாதிக்கப்பட்டுள்ளது.

பள்ளிபாளையம் வட்டாரத்தில் குப்பண்டாம்பாளையம், தட்டாங்குட்டை, சமயசங்கிலி, களியனூர், எலந்தகுட்டை, புதுப்பாளையம், ஆலாம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், மேட்டூர் கிழக்குக் கரை வாய்க்கால் பாசனத்தை பயன்படுத்தி, 10 ஆயிரத்துக்கும் மேற்ப்பட்ட ஏக்கரில் பயிர் சாகுபடி நடந்து வருகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம், பாசனத்திற்கு மேட்டூர் அணையில் இருந்து கிழக்குக்கரை வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதை தொடர்ந்து, உழவு மற்றும் நடவு பணிகள் முழுவீச்சில் நடந்தது. இந்நிலையில், தொடர் மழை

பெய்தபோதும், வாய்காலில் தண்ணீர் வரத்து குறைவாக உள்ளதால், கடைமடை வரை தண்ணீர் போய்சேரவில்லை. அதனால் உழவு பணி பாதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது: பள்ளிபாளையம் பகுதிதான் வாய்க்காலின் கடைசி பகுதி. தற்போது வாய்க்காலில் தண்ணீர் வரத்து குறைந்துள்ளது. அதனால், உழவு பணிக்கு தேவையான தண்ணீர் வராததால், உழவு பணி பாதிக்கப்பட்டுள்ளது. வாய்க்காலின், 38வது மைலில் உள்ள பெருமாள் மலை பகுதிக்கு, தண்ணீர் வரத்து முற்றிலும் இல்லாததால், தற்போது உழவு பணி நிறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து பொதுபணித்துறை அதிகாரியிடம் கேட்டால், தண்ணீர் அளவு குறைந்து விட்டது என கூறுகின்றனர். பள்ளிபாளையம் பகுதிக்கு தண்ணீர் வரத்தை கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க, பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு, மாவட்ட கலெக்டர் உத்தரவிட வேண்டும். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## மழையால் சாம்பல் பூசணி அழுகல்: இழப்பால் விவசாயிகள் கவலை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால், ஆயுத பூஜை விற்பனைக்காக, சாகுபடி செய்யப்பட்டிருந்த சாம்பல் பூசணி அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்பு, மஞ்சள், மரவள்ளி கிழங்கு, பருத்தி, தக்காளி, தென்னை, கேழ்வரகு உள்ளிட்ட பயிர்கள் பிரதானமாக சாகுபடி செய்யப்படுகிறது. மேலும் மாவட்டத்தில் காய்கறி பயிர்களும், சீசனுக்கு தகுந்தவாறு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த வகையில், ஆயுதபூஜையை முன்னிட்டு, பென்னாகரம், பாலக்கோடு உள்ளிட்ட தாலுகாவில், 100 ஏக்கருக்கு மேல், சாம்பல் பூசணி சாகுபடி

செய்யப்பட்டுள்ளது. இறவை பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள, சாம்பல் பூசணி, நன்கு வளர்ச்சி அடைந்து வந்தது. மேலும், சாம்பல் பூசணி சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளில், களைகளும் அதிகளவில் வளர்ந்து வந்தது. ஆயுதபூஜைக்கு, இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், பாலக்கோடு, பென்னாகரம் பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக, நிலத்தில் தேங்கும் மழை நீர் மற்றும் இதனால் ஏற்படும் ஈரப்பதம் காரணமாக, நன்கு விளைந்துள்ள, சாம்பல் பூசணிகள் அழுகும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், சாம்பல் பூசணி சாகுபடி செய்துள்ள விவசாயிகள், இவற்றை பறித்து, பாலக்கோடு, தர்மபுரி சந்தைகளில் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதால், கவலை அடைந்துள்ளனர். மேலும், பல விவசாயிகள், நிலத்தில் தண்ணீர் தேங்காமல் இருக்க, தேவையான நடவடிக்கைகளையும், நிலத்தில் உள்ள களைகளை அகற்றியும் வருகின்றனர். இதனால், ஆயுதபூஜை தினத்தில், சாம்பல் பூசணி விலை அதிகரிக்கும் என, விவசாயிகள் தெரிவித்தனர்.

**காட்டு பன்றிகளிடமிருந்து பயிர்களை காக்க பயிற்சி**

பாப்பிரெட்டிப்பட்டி: தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த தமானிகோம்பையில், காட்டுப்பன்றிகளிடமிருந்து பயிர்களை பாதுகாக்க, விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. அட்மா திட்டத்தின் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரவி, காட்டுப்பன்றிகளிடமிருந்து பயிர்களை காப்பது குறித்து விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்ப பயிற்சியை அளித்து, கூறியதாவது: வயலின் வரப்பு பகுதியில், ஈகோடான் என்னும் திரவ வடிவ மருந்தை, ஒரு ஏக்கருக்கு தேவையான அளவு, சணலில் நான்கு மணி நேரம் ஊறவைத்து, வரப்பை சுற்றிலும் வேலிபோல் அமைக்க வேண்டும். இதை காட்டுப்பன்றிகள்

நுகரும் போது, ஒவ்வாமையை ஏற்படுத்தும். இவ்வாறு காட்டுப்பன்றிகள் வயலுக்குள் வராமல் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு, அவர் கூறினார்.

## மழையால் நிரம்பும் ஏரிகள்: நிலத்தடி நீர்மட்டம் உயர்வு

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த மூன்று நாட்களில், 575 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளதால், ஏரிகள் வேகமாக நிரம்பி வருகின்றன. இதனால், நிலத்தடி நீர்மட்டம் உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பெய்யும் மழையால் மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளுக்கு அதிகளவில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஆனால், தற்போது மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ள நீர் நிலைகள் ஆக்கிரமிப்பின் பிடியில் சிக்கியுள்ளதால், ஏரி, குளம், கண்மாய் பல ஆண்டுகளாக நிரம்பாமல் உள்ளது. இதன் காரணமாக, நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டு, பாசனத்திற்கு தண்ணீர் இன்றி விவசாயிகள் சிரமப்பட்டனர். விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாத காரணத்தால், மாவட்டத்தில் உள்ள, 1,154 ஏரி, குளம், குட்டை மற்றும் நீர்நிலைகளில், தண்ணீர் இன்றி, கருவேலம் மரங்கள் மட்டுமே காட்சியளிக்கிறது. மேலும் நீர்நிலைகள் தூர்வாரப்படாமல் உள்ளதால், மழைக்காலங்களில் தண்ணீரை தேக்கி வைக்க முடியாத நிலை உள்ளது. இதனால், நிலத்தடி நீர்மட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட, ஓசூர், தேன்கனிக்கோட்டை, தளி, அஞ்செட்டி, பாரூர், கிருஷ்ணகிரி, நெடுங்கல், பெனுகொண்டாபுரம், ராயக்கோட்டை, போச்சம்பள்ளி, சூளகிரி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த, 2 ம் தேதி முதல், 4 ம் தேதி வரை, மூன்று நாட்களில் மட்டும், 575 மில்லி மீட்டர் அளவிற்கு கனமழை பெய்ததால், ஏரிகள் வேகமாக நிரம்பி வருகிறது. தேன்கனிக்கோட்டை தாலுகா தளி பகுதியில், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள, 3 ஏரிகள்,

வட்டார வளர்ச்சி அலுவலர் கட்டுப்பாட்டில் உள்ள, 7 ஏரிகள் என மொத்தம், 10 ஏரிகள் கனமழை காரணமாக நிரம்பியுள்ளது. அத்துடன் சில ஏரிகள் நிரம்பும் தருவாயில் உள்ளன. மாவட்டத்தில் ஏரிகள் வேகமாக நிரம்பி வருவதால், நிலத்தடி நீர்மட்டம் உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இன்னும் சில நாட்கள் தொடர்ந்து மழை பெய்தால், விவசாய தொழில் மேன்மையடையும் என, விவசாயிகள் கூறினர்.

## 'வரத்து குறைந்தும் விற்பனையில்லை': காய்கனி வியாபாரிகள் வருத்தம்

ஈரோடு: 'மழையால் காய்கனி மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்துள்ளது. எனினும் எதிர்பார்த்த அளவு விற்பனை இல்லை' என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஈரோடு நேதாஜி காய்கனி மார்க்கெட், பிரதானமாக மார்க்கெட்டாகும். இங்கு மொத்த மற்றும் சில்லரை விலையில் காய்கனிகளை பொதுமக்கள், கடைக்காரர்கள் உள்ளிட்டோர் வாங்கி செல்கின்றனர். சேவூர், கொக்கராயன் பேட்டை, வெள்ளோட்டில் இருந்து நாட்டு காய்களும், இங்கிலீஷ் காய்கள் பெங்களூரு, மேட்டுப்பாளையம், ஒசூர், ஊட்டியில் இருந்தும் தினமும் லாரிகள் மூலம் வருகிறது. மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பழனிச்சாமி கூறியதாவது: தாளவாடியில் இருந்து, பெருமளவில் தக்காளி வருகிறது. முன்பு, 5,000 பெட்டி(ஒரு பெட்டி - 15 கிலோ) வந்தது. கடும் மழையால் தக்காளி செடிகள் சேதம் அடைந்துள்ளன. எனவே வரத்து வெகுவாக குறைந்துள்ளது. தற்போது, 3,000க்கும் குறைவாகவே பெட்டிகள் வருகின்றன. பெரும்பாலும் சேதமடைந்த பழங்களே உள்ளன. பச்சை மிளகாய், பெ.வெங்காயம் முன்பு, 10 லோடு வந்தது. மழையால் தற்போது பாதியாக குறைந்துள்ளது. முருங்கைக்கு தான் பிரச்னை இல்லை. மழைக்கு

தழைத்தோங்கும். நாட்டு காய்கள் முன்பு, 15 மினி லாரிகள் வந்தன. தற்போது, ஐந்து மினி லாரிகளில் கூட காய் வருவதில்லை. சின்ன வெங்காயம் உடனுக்குடன் பயன்படுத்தி கொள்ள வேண்டிய நிலையில் தான் உள்ளது. ஓரிரு நாட்கள் வைத்தால் அழுகிவிடும் அபாயம் உள்ளது. மழையின் காரணமாக நாட்டு, இங்கிலீஷ் காய்கறி வரத்து குறைந்துள்ளது. புரட்டாசி மாதம் என்பதால் எதிர்பார்த்த விற்பனை இல்லை. திருமணம் உள்ளிட்ட விசேஷங்கள் ஏதும் இல்லாதது முக்கிய காரணமாகும். எனவே குறைவான விலைக்கே விற்கப்படுகிறது. ஆனால், மழை தொடரும் பட்சத்தில், காய்கறி வரத்து வெகுவாக குறையும். ஐப்பசி மாதம் துவங்கும்போது, காய்கறி விலை பன்மடங்காக அதிகரிக்கும். கத்திரிக்காய் கூட கிலோ, 60 ரூபாய்க்கு விற்கப்படும். ஈரோடு மாவட்டத்தில் மட்டுமின்றி, நீலகிரி மாவட்டத்திலும், அதாவது காய்கனிகள் விளையும் பகுதிகளில் கன மழை கொட்டி தீர்க்கிறது. எனவே காய்கனி வரத்து குறைந்துள்ளது. ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டுக்கு கூட கன மழையால் குறைந்த அளவிலான காய்கனிகளே விற்பனைக்கு வந்துள்ளன. புரட்டாசி மாதம் முடிந்தால் தான், காய்கனிக்கான தேவை அதிகரிக்கும். கன மழை தொடர்ந்தால் முகூர்த்த சீசனில் விலை அதிகரிக்கும். வரத்து குறைந்தும் விற்பனை இல்லாததால் விலை கிடைக்காமல் வியாபாரிகள் வருந்துகின்றனர். இவ்வாறு, அவர் கூறினார்.

**பனை விதைகள் சேகரிப்பு விவரம்: பள்ளிகளிடம் கேட்க முடிவு**

ஈரோடு: பனை விதைகள் சேகரிப்பு குறித்து மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிடமும் விளக்கம் கேட்கப்படும் என்று மாவட்ட சுற்றுச்சூழல் மன்றங்களின் ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

நீர் நிலைகளின் கரைகளை வலுப்படுத்தும் தன்மை பனை மரங்களுக்கு உள்ளது. எனவே ஏரி, குளம், நதி கரைகள் மட்டுமின்றி நெடுஞ்சாலை,

பஞ்., ரோட்டோரங்களில் கூட பனை மரங்களை வளர்க்க வேண்டும். பனை விதைகளை பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள், தேசிய பசுமை படை, என்.எஸ்.எஸ். போன்றவை சேகரிக்க வேண்டும் என்று ஏற்கனவே கலெக்டர் கேட்டு கொண்டிருந்தார்.

இதுகுறித்து மாவட்ட சுற்றுச்சூழல் மன்றங்களின் ஒருங்கிணைப்பாளர் கீதா கூறியதாவது: ஒரு லட்சம் பனை விதைகள் சேகரிக்க திட்டமிட்டுள்ளோம். தன்னார்வலர்கள் சுய விருப்பு அடிப்படையில் பல ஆயிரம் கிலோ பனை விதைகளை கொடுக்க முன் வந்துள்ளனர். அவர்களிடம் தயார் நிலையில் பனை விதைகள் உள்ளன. ஒன்றாக இவை சேகரிக்கப்பட்ட பின் நடவு செய்ய நீர்நிலைகளுக்கு எடுத்து செல்லப்படும். நகர்ப்புற பள்ளி மாணவ,மாணவிகளுக்கு கிடைக்காது. எனவே கிராமப்புற மாணவ,மாணவிகள் பனை விதைகளை சேகரிக்க ஏற்கனவே பள்ளி தலைமை ஆசிரியர்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாணவ, மாணவிகளும் ஆர்வமாக பனை விதை சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். காலாண்டு விடுமுறைக்கு பின் இன்று தான் பள்ளி துவங்குகிறது. மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும், தனியார், மெட்ரிக் பள்ளிகளுக்கு மெயில் அனுப்பி பனை விதைகள் சேகரிப்பு நினைவூட்டப்படும். இரண்டு அல்லது மூன்று நாள் கால அவகாசத்துக்கு பின் ஒவ்வொரு பள்ளியும், தாங்கள் சேகரித்த பனை விதைகள் குறித்து தெரிவிக்க அறிவுறுத்துவோம். சேகரித்த பனை விதைகளை யாரிடம், எவ்வாறு வழங்க வேண்டும் என்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும். மழையின்மையால் பனை விதைகள் நடவு தாமதமாகி உள்ளது. தற்போது தான் இரண்டு மழை பெய்துள்ளது. வறட்சியில் பனை மரங்கள் வளராமல் போய் விடும் என்பதால் விதைப்புக்கு காத்திருந்தோம். மழை தொடர்வதால் பனை விதைகளை

நடவு செய்ய தயாராகி உள்ளோம். பனை விதைகளை யாரும் பிடுங்கி விடக்கூடாது என்பதற்காக சில நாட்கள் வரை கண்காணிப்பு தொடரும். உள்ளூர் மக்கள் ஒத்துழைத்துடன் பனை விதைகள் நடவு செய்யப்படும். ஒரு வாரத்தில் பனை விதைகள் சேகரிப்பதுடன், நடவும் துவங்கும். இவ்வாறு, அவர் கூறினார்.

### பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து குறைவு

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறும், கூடலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாறும், இந்த அணையின் நீர்வரத்து ஆதாரமாக விளங்குகிறது. கடந்த ஆக., 16ம் தேதி, பவானிசாகர் அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்கால் மூலம் விவசாயத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில், பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில் வறண்ட வானிலை நிலவுகிறது. நேற்று காலை, 8 மணிக்கு பவானிசாகர் அணைக்கு வினாடிக்கு, 363 கனஅடி தண்ணீர் வந்தது. இதனால் அணையின் நீர்மட்டம், 65.13 அடியாக குறைந்தது. அணையில் இருந்து பவானி ஆற்றில் வினாடிக்கு, 600 கனஅடி தண்ணீரும், கீழ்பவானி வாய்க்காலில் வினாடிக்கு, 2,300 கனஅடி தண்ணீரும் திறக்கப்படுகிறது.

### நெல் நடவு பணி: விவசாயிகள் ஆர்வம்

வேலாயுதம்பாளையம்: நொய்யல் சுற்றுப்பகுதிகளில், தை அறுவடைக்கு, தற்போது நெல் நடவு பணிகள் துவங்கப்பட்டு, துரிதமாக விவசாயிகள் செயல்படுத்தி வருகின்றனர். கரூர் மாவட்டம் புகழூர், நொய்யல், நடையனூர், தளவாபாளையம், மண்மங்கலம் உட்பட பல்வேறு பகுதிகளில், தை மாதம் நெல் அறுவடைக்கு, தற்போது நடவுப்பணிகள் துவங்கப்பட்டு, துரிதமாக நடக்கிறது. மேலும், நெல் பயிரிட நாற்றங்கால் விடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நெல்

நாற்றங்கால் பயிரிடும் விவசாயிகள், நெல் சான்று பெற்ற விதைகளான, பி.பி.டி.520 ரகம், ஆடுதுறை 45 உள்ளிட்ட விதை நெல் ரகங்களை, தேர்வு செய்து வேளாண் பணிகளை ஆர்வமுடன் துவக்கியுள்ளனர்.

## ஒட்டன்சத்திரத்தில் காய்கறி விலை அதிகரிப்பு

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு உள்ளூர் பகுதிகளில் விளைந்த காய்கள் மட்டுமின்றி, அருகிலுள்ள மணப்பாறை மற்றும் சுற்றி உள்ள பகுதிகளில் விளைவிக்கப்பட்ட காய்கறிகளும் அதிகமாக கொண்டு வரப்படுகிறது. சமீபத்தில் பெய்த மழை காரணமாக காய்கறி செடிகள் பாதிப்புக்கு உள்ளாகின. முருங்கைச் செடிகளில் பூக்கள் உதிர்ந்தும், வெண்டைச் செடிகள், சுரைக்காய்கள் நிலத்திலேயே அழுகியதாலும் விலை உயர்ந்துள்ளது.கடந்த பல நாட்களாகவே வெண்டைக்காய் ஒரு கிலோ ரூ.12 க்கு விற்றது. ஓணம் பண்டிகை சமயத்தில் மட்டும் அதிகமாக விற்றது. பின்னர் பழைய நிலைக்கு திரும்பியது. இந்நிலையில் உள்ளூர் பகுதியில் வரத்து இல்லாததால் கிலோ ரூ.12 க்கு விற்ற வெண்டைக்காய் நேற்று ரூ.23க்கு விற்றது. இதேபோல் பலநாட்களாக ரூ.20க்கும் குறைவாக விற்ற முருங்கை ரூ.25க்கு விற்றது. கடந்த பல மாதங்களாவே சுரைக்காய் கிலோ ரூ.2 லிருந்து ரூ.3 வரை விற்றது. ஆனால் இதன் நேற்றைய விலை ரூ.8.

## நத்தத்தில் மூலிகை பொருட்கள் தேக்கம்! வரத்து அதிகரிப்பு காரணம்

நத்தம் : வரத்து அதிகரித்துள்ளதால் காரணமாக நத்தத்தில் மூலிகை பொருட்கள் அதிக அளவில் தேக்கமடைந்துள்ளன.

நத்தம் சுற்று வட்டார பகுதியில் கரந்தமலை, லிங்கவாடி மலை, அழகர்மலை, சிறுமலை உள்ளிட்ட மலை பகுதிகள் உள்ளன. இந்த மலைகள் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இயற்கை மூலிகை செடிகள் அதிக அளவில் காணப்படுகின்றன. சீந்தல்கொடி, சிறுகுறிஞ்சா தளை, ஓரிலை தாமரை, காட்டு துளசி, அரப்பு, சாரணக்கொடி மற்றும்

வேர், நாவல் விதை, புங்க விதை போன்ற மூலிகை பொருட்கள் இங்கு கிடைக்கிறது. இப்பகுதிகளில் உள்ள கிராமத்தினர் மூலிகை பொருட்களை சேரித்து உலர வைத்து நத்தத்தில் உள்ள வியாபாரிகளிடம் விற்கின்றனர். இவற்றை கிலோ கணக்கில் வாங்கும் வியாபாரிகள் கர்நாடகா, அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் உள்ள மூலிகை மருந்து தயாரிப்பு நிறுவனங்களுக்கு அனுப்புகின்றனர். இது தவிர தேங்காய் ஓடு, கண்ணாடி, புங்கை ஓடு, சீத்தாக்காய் உள்ளிட்ட பொருட்களை அழகு வேலைப்பாடுகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். கோடை காலத்தில் பெய்த மழையின் காரணமாக தற்போது அதிக வரத்து ஏற்பட்டுள்ளது. கிடைக்கும் ஆர்டர்களுக்கு மேல் பொருட்களின் வரத்து உள்ளதால் பொருட்கள் தேக்கமடைந்துள்ளது. எனவே வியாபாரிகள் மூடைகளில் நிரப்பி குடோன்களில் தேக்கி வைத்துள்ளனர். வியாபாரி போஸ் கூறுகையில், ""தேவைக்கு மேல் வரத்து இருப்பதால் பொருட்கள் தேங்கியுள்ளன. அதிக ஆர்டர் கிடைக்கும் வரை பாதுகாத்து வரவேண்டும். இதனால் நஷ்டம் ஏற்படுகிறது' என்றார்.

## தாண்டிக்குடி மலைப்பகுதியில் துவங்கியது காபி சீசன்

தாண்டிக்குடி : தாண்டிக்குடி கீழ் மலைப்பகுதியில் காபி சீசன் துவங்கி பழங்கள் பறிக்கப்படுகிறது.

தாண்டிக்குடி, பண்ணைக்காடு, பாச்சலூர், ஆடலூர், பன்றிமலை, பூலத்தூர், தடியன்குடிசை, புல்லாவெளி, கே.சி.பட்டி, பெரியூர் உள்ளிட்ட கீழ்மலைப்பகுதியில் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பில் காபி விவசாயம் செய்யப்படுகிறது. தற்போது பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஆங்காங்கே காபி பழங்கள் பழுக்க துவங்கியுள்ளது. இதையடுத்து ஊடு பழங்களை விவசாயிகள் பறித்து வருகின்றனர். வழக்கமாக அக்டோபரில் துவங்கி பிப்ரவரியில் சீசன் நிறைவடையும். கடந்தாண்டு துவக்கத்தில்

இருந்தே காபி விலை மந்தமாக இருந்தது. பராமரிப்பு, இடு பொருள், காய்ச்சுதல் உள்ளிட்டவற்றை தாண்டி விற்பனைக்கு செல்கிறது. தசை கூலியை கணக்கிடும் போது விலையுயர்வு இருந்தால் மட்டுமே விவசாயத்தில் ஓரளவு லாபம் ஈட்ட முடியும் என்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர். ஆண்டொன்றுக்கு கூலியுயர்வு தவிர்க்க முடியாத நிலை என்றாலும் காபிக்கு என நிரந்தரமான விலை நிர்ணயம் இல்லாதததது கவலையளிக்கிறது. பரப்பளவு, உற்பத்தியை அதிகரிக்க காபி விரிவாக்க வாரியம் மானியம் அளித்து ஊக்கப்படுத்துகிறது. இடைத்தரகர் இன்றி சரியான விலை கிடைக்க நடவடிக்கை எடுத்தால் விவசாயிகள் மகிழ்ச்சியடைவர்.

## நத்தம் விவசாயிகள் நெல்நடவு பணியில் ஆர்வம்

நத்தம் : கடந்த சில வருடங்களாக நத்தம் பகுதியில் பருவமழை போதிய அளவில் பெய்யவில்லை. இதனால் விவசாய பணிகள் வெகுவாக பாதிக்கப்பட்டது. கிணறுகள் வறண்டு போனதால் விவசாயிகள் தங்களது விளை நிலங்களை தரிசாக விடும் நிலை இருந்தது. கடந்த சில நாட்களாக நத்தம் வட்டாரத்தில் பரவலாக மழை பெய்தது. இதையடுத்து குமரபட்டி, புதுப்பட்டி, சிறுகுடி உள்ளிட் பகுதிகளை சேர்ந்த விசாயிகள் நெல் நடவு பணிகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். வயல்களை உழுது நடவுக்கு தயார் செய்தல், நாற்றங்கால் அமைப்பது, நடவுக்காக நாற்று பறிப்பது உள்ளிட்ட பணிகளை விவசாயிகள் செய்து வருகின்றனர். தற்போது பெய்துள்ள மழையால் நீர் நிலைகளுக்கு போதிய தண்ணீர் வரவில்லை. கூடுதலாக மழை பெய்தால் மட்டுமே நெற்பயிர்களை காப்பாற்ற முடியும் என விவசாயிகள் கூறுகின்றனர். இருப்பினும் தொடர்ந்து மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்புடன் நடவு பணிகளை தற்போது துவக்கியுள்ளனர். குமரபட்டி விவசாயி பொன்னுச்சாமி கூறுகையில், ""தற்போது பெய்துள்ள மழை நெல் சாகுபடிக்கு போதாது. தொடர்ந்து மழை பெய்யும் என்ற நம்பிக்கையுடன் நடவு பணியை துவக்கியுள்ளோம்" என கூறினார்.

**கரும்பு விவசாயிகளுக்கு வயல்வெளி பயிற்சி**

தேவதானப்பட்டி : வைகை அணை ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை சார்பில் கரும்பு விவசாயிகளுக்கு இரண்டு நாள் வயல்வெளி பயிற்சி நடந்தது.பெரியகுளம், ஜெயமங்கலம், ஆண்டிபட்டி, போடி ஆகிய கரும்பு கோட்டங்களை சேர்ந்த 40 கரும்பு விவசாயிகளுக்கு வைகை அணை ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை சார்பில் இரண்டு நாள் வயல்வெளி பயிற்சி முகாம் நடந்தது. முதல் நாள் பயிற்சியில் கரும்பு மகசூலை அதிகரிப்பது, செலவினங்களை குறைப்பதற்கு உழவியல் முறைகள், திசுவளர்ப்பு, பரு செதில் நாற்று உற்பத்தி, இயந்திரங்களின் பயன்பாடு, சொட்டு நீர் பாசன முறை மற்றும் பராமரிப்பு நுண்ணுயிர் உரங்கள், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அவற்றின் கட்டுப்பாடு, பயோ காம்போஸ்ட் பயன்கள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. இரண்டாம் நாள் வயல்வெளி பயிற்சியின் போது ஜெயமங்கலம், மேல்மங்கலம், அழகர்நாயக்கன்பட்டி, தாமரைக்குளம் கிராமங்களில் சாகுபடி செய்துள்ள உயர்விளைச்சல் தரும் கரும்பு ரகங்களை விவசாயிகள் பார்வையிட்டனர். ஆலை வளாகம், மண் பரிசோதனை ஆய்வகம், நுண்ணுயிர் உரங்கள் ஆய்வகம், உயிரியல் முறை பூச்சிக்கட்டுப்பாட்டு ஆய்வகம், பயோ காம்போஸ்ட் உற்பத்தி கூடம் ஆகியவற்றை விவசாயிகள் பார்வையிட்டனர்.ஏக்கருக்கு 70 டன் கரும்பு உற்பத்தி செய்த தேவதானப்பட்டி விவசாயி வீரணன் வயல்வெளி பயிற்சிக்கு வந்த விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

**கலக்கல் ! : இயற்கை விவசாயத்தில் மண்டபம் பேரூராட்சி : உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது**

ராமேஸ்வரம்: ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பேரூராட்சி இயற்கை விவசாயம், உரம் என, மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்னோடியாக திகழ்கிறது.

மண்டபத்தில் தினமும் 5 முதல் 10 டன் வரை குப்பை சேகர மாகிறது. இந்த குப்பையை அகற்ற 3 ஆண்டுகளுக்கு முன் "வளம் மீட்பு பூங்கா திட்டம்' செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் ரூ. 30 லட்சத்தில் 4 ஏக்கரில் திடக்கழிவு மேலாண்மை, விவசாய நிலம் ஏற்படுத்தப் பட்டது. திடக்கழிவு மேலாண் மையில் மக்கும், மக்காத குப்பையை தனியாக பிரிக்கப் படுகிறது. மக்கும் குப்பையில் இயற்கை மற்றும் மண்புழு உரம் தயாரிக்கின்றனர். பிளாஸ்டிக் கழிவுகளை குறைந்த விலையில் வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர்.

விவசாய நிலத்தில் தென்னை, வாழை, வெண்டை, பூசணி, புடலை, கொத்தவரை போன்ற காய்கறி பயிர்கள், துளசி, வல்லாரை, ஓம், ஆடாதோடா போன்ற மூலிகை செடிகளையும் வளர்க்கின்றனர். இவற்றிற்கு அங்கு தயாரிக்கப்படும் இயற்கை மற்றும் மண்புழு உரத்தை பயன் படுத்துகின்றனர். இதனால் பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்துள்ளன. இயற்கை முறையில் கிடைக்கும் காய்கறிகள் என்பதால் அவற்றை மக்கள் விரும்பி வாங்குகின்றனர். மேலும் மீதமுள்ள இயற்கை, மண்புழு உரத்தை விற்பனை செய்கின்றனர். இயற்கை உரத்தை கிலோ ரூ.5க்கும், மண்புழு உரத்தை ரூ.10க்கும் விற்கின்றனர். இயற்கை விவசாயம் மூலம் மண்டபம் பேரூராட்சி, மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்னோடியாக திகழ்கிறது.

பேரூராட்சித் தலைவர் தங்கமரைக்காயர், செயல் அலுவலர் மாலதி கூறியதாவது: பிளாஸ்டிக் பொருள், தெருக்களில் குப்பை இல்லாத பேரூராட்சியாக மாற்றிட "வளம் மீட்பு பூங்கா திட்டம்' அமைத்தோம். தற்போது இயற்கை விவசாயம், உரம் போன்றவற்றின் மூலம் அப்பகுதியே சுற்றுசூழல் பூங்காவாக மாறி உள்ளது. உரங்களை குறைந்த விலைக்கே விற்கிறோம். காய்கறி மற்றும் உரம் மூலம் ஆண்டிற்கு ரூ.12

ஆயிரம் கிடைக்கிறது. இந்த பூங்காவை மற்ற உள்ளாட்சி அமைப்பினரும் பார்த்துவிட்ட செல்கின்றனர், என்றனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**அடுத்த 24 மணி நேரத்தில் புதுச்சேரி, தமிழகத்தின் வட மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

அடுத்த 24 மணி நேரத்தில், புதுச்சேரி, தமிழகத்தின் வட மாவட்டங்களில் ஆங்காங்கே பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: வெப்பசலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பதிவாகி வருகிறது. மாநிலத்தில் ஓரிரு மாவட்டங்களில் இடியுடன் கூடிய பலத்த மழையும் பெய்து வருகிறது.

கடந்த 24 மணி நேரத்தில், மாநிலத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பதிவாகி இருக்கிறது. இதில் அதிகபட்சமாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் 80 மி.மீட்டர் மழை பதிவாகியது. அதற்கு அடுத்தப்படியாக கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் 40 மி.மீ, திருவண்ணாமலை மாவட்டம் சாதனூர் அணை, தேன்கனிக்கோட்டை, தருமபுரி, திண்டிவனம், கடலூர், காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூர் உள்ளிட்ட இடங்களில் 30 மி.மீட்டர் மழை பதிவாகியது.

பலத்த மழைக்கு வாய்ப்பு:

புதுச்சேரி, தமிழகத்தின் வட மாவட்டங்களில், திங்கள்கிழமை ஆங்காங்கே இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வெப்பசலனம் நீடிப்பதால், அடுத்து வரும் நாள்களுக்கு தமிழகத்தின் வட மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் பலத்த மழையை எதிர்பார்க்கலாம். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 94 டிகிரியாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**பருத்தி உற்பத்தி குறைய வாய்ப்பு**



நடப்பு நிதி ஆண்டில் பருத்தி உற்பத்தி 5 லட்சம் பேல் முதல் 10 லட்சம் பேல் வரை குறைய வாய்ப்பிருப்பதாக இந்திய பருத்தி வாரியம் தெரிவித்துள்ளது.

இந்திய பருத்தி வாரியத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான பி.கே. மிஸ்ரா ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு பருத்தி உற்பத்தி அளவு சுமார் 370 லட்சம் "பேல்'களாக இருக்கும் (ஒரு "பேல்' என்பது 170 கிலோ). பருத்திப் பயிர் விளையும் நில அளவு குறைந்துள்ளதால் கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு உற்பத்தி அளவு சுமார் 5 லட்சம் பேல் முதல் 10 லட்சம் பேல் வரை குறைவாக இருக்கும்.

அக். 10-ஆம் தேதி முதல் 84 பருத்தி கொள்முதல் மையங்கள் செயல்படத் தொடங்கும் என்று அவர் கூறினார்.

முன்னதாக, பருத்திக்கான ஆதார விலை, குவின்டாலுக்கு ரூ. 3,936 முதல் ரூ. 4,100-ஆக இருக்கும் என்று மத்திய ஜவுளித் துறை அமைச்சர் சந்தோஷ்குமார் கங்கவார் தெரிவித்திருந்தார். பருத்தியில் உள்ள ஈரப்பதத்துக்கு ஏற்ப ஆதார விலை அளிக்கப்படும் என்றும் ஆதார விலையை மேலும் அதிகரிக்க மத்திய நிதி அமைச்சகத்துடன் தொடர்ந்து பேசி வருவதாகவும் அவர் கூறினார்.

ஒரு குவின்டால் பருத்திக்கு ஆதார விலை ரூ. 5,000-ஆக அறிவிக்க வேண்டுமென தெலங்கானா மாநில பருத்தி விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

## முதலீட்டாளர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி

தில்லியில் எஸ்எம்சி குளோபல் செக்யூரிட்டீஸ் நிறுவனம், டெய்ஸ் அஸட் மேனேஜ்மென்ட் (இந்தியா) நிறுவனம் ஆகியவை இணைந்து முதலீட்டாளர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சியை சனிக்கிழமை நடத்தின.

இந்தியா ஹபிடாட் மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் எஸ்எம்சி குளோபல் செக்யூரிட்டீஸ் நிறுவனத்தின் தலைவர், மேலாண் இயக்குநர் சுபாஷ் சந்த் அகர்வால், எஸ்எம்சி குழுமத்தின் இயக்குநர்கள் அஜய் கர்க், அனுராக் பன்சால், எஸ்எம்சி முன்பேர வர்த்தக ஆராய்ச்சிப் பிரிவின் தலைமை அதிகாரி நிதின் முரார்கா, டெய்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் தீபக் ஜாகி ஆகியோர் பங்கேற்று பங்கு வர்த்தகம், கடன் பத்திரங்கள், பரஸ்பர நிதி (மியூச்சுவல் ஃபண்ட்), ரியல் எஸ்டேட், வங்கி முதலீட்டுத் திட்டங்கள் உள்பட பல்வேறு முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் அவற்றில் கிடைக்கும் வருமானம் குறித்தும் விரிவாக விளக்கினர்.

குறிப்பாக பங்குச் சந்தையில் தின வர்த்தகத்தில் உள்ள இடர்பாடுகள், அதை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து வரைபடங்களுடன் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. பங்குச் சந்தையைப் பொருத்தவரை, நீண்ட கால அடிப்படையில் நிறுவனப் பங்குகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் நல்ல வருவாய் ஈட்டித் தரும். அதே சமயம், தின வர்த்தகத்தைப் பொருத்தவரை, கணித முறையில் (டெக்னிக்கல்) பங்குகளை வாங்குதல், விற்பனை செய்தலில், இழப்பு குறித்து சரியான இலக்கை நிர்ணயித்துக் கொண்டு (ஸ்டாப் லாஸ்) வர்த்தகம் செய்தால் லாபம் ஈட்ட முடியும். ஆட்டோ டிரெண்டர் என்று சொல்லப்படும் கணித முறையிலான வரைபடங்கள் அளிக்கும் சமிக்ஞைகள் தின வர்த்தகத்துக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

டெய்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் தீபக் ஜாகி, "படித்து முடித்து வேலைக்குச் சென்றவுடன் (வயது 25) முதலீடுகளை மேற்கொள்ள ஆரம்பிக்க வேண்டும்.

அப்போதுதான், முதலீட்டாளர் 50 வயது எய்தும்போது, தனது பெண் குழந்தைகளின் திருமணம், ஆண் குழந்தைகளின் படிப்புச் செலவு ஆகியவற்றை எளிதில் சமாளிக்க அந்த முதலீடுகள் உதவும்' என்று தெரிவித்தார்.

கடந்த 1990-இல் பங்குச் சந்தையில் செலுத்திய ரூ. 1 லட்சம் முதலீட்டின் மதிப்பு தற்போது ரூ. 2.6 கோடியாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

**இயற்கை வளங்களைக் காப்போம்!**

இன்றைய சூழலில் சுத்தமான காற்றை சுவாசிக்க முடிவதில்லை. சுத்தமான நீரைப் பருக முடியாத நிலை உள்ளது. நீர், நிலம் இவ்விரண்டுமே தனது தன்மையை இழந்து வருகிறது. நீர் நிலைகள்

அழிந்தும், வன வளங்கள் அருகியும் வருவதால் நாம் இதுபோன்ற பல்வேறு இன்னல்களை சந்திக்க வேண்டியுள்ளது.

÷25 ஆண்டுகளில் நாம் அனுபவித்து வந்த இயற்கை வளங்கள், இன்று அருகி வருவதைக் காண்கிறோம். நீர், மணல், வனங்கள், வன உயிர்கள், புல்வெளிகள், தாதுக்கள் என எண்ணற்ற இயற்கை வளங்களை நாம் பெற்றுள்ளோம். மனித இனத்தின் பெருங்கொடை இயற்கை வளங்கள்தான். மனிதன் இயற்கையை சார்ந்தே வாழ்ந்து வருகிறான். எனவேதான், இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து நம் முன்னோர்கள் அவற்றை தெய்வமாக வழிபட்டனர்.

÷இயற்கைக்கு மாறாக அதிகரித்து வரும் நகரமயமாதல், தொழில்மயமாதல், மக்கள் தொகைப் பெருக்கம் போன்ற காரணங்களால் மாசுபட்ட நீர் நிலைகள், வறண்ட நீர் நிலைகள் என இயற்கை வளங்கள் அருகி வருகின்றன.

÷தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உற்பத்தியாகும் கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, தாமிரவருணி போன்ற நதிகள் நாட்டின் உணவு உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கின்றன. தமிழகத்தில் உற்பத்தியாகி தமிழகப் பகுதிகளில் பாய்ந்து கடலில் கலக்கும் தாமிரவருணி நதி, ஆக்கிரமிப்பு மற்றும் கழிவுகளால் மாசுபட்டு வருகிறது. பெருமளவில் மணல் அள்ளப்பட்டதால், தாமிரவருணி நதியில் பாறைகள் மட்டுமே மிஞ்சி இருக்கின்றன. மணல் வளம் குறைந்ததால் நீரின் சுவையும் நாளுக்கு நாள் மாறி வருகிறது.

÷தாமிரவருணி நதியின் போக்கு மாறியதால் பல இடங்களில் ஓடையாக காட்சியளிக்கிறது. நீர் நிலைகளில் மணல் எடுத்தல், வனங்களில் மரங்களை வெட்டுதல், காடுகளை விளைநிலங்களாக ஆக்கிரமித்தல் போன்ற மனிதனின் நடவடிக்கையினால் இயற்கை வளங்களின் பரப்பளவு குறைந்து வருவது உண்மை.

÷மனித உயிரினம் மட்டும் பெருகி வருகிறது. சுற்றுச்சூழல் பாதிப்பால் பிற விலங்கினங்கள், தாவர வகைகள் குறைந்தும், அரிதாகியும் வருகின்றன. பல உயிரினங்கள் அவை இருப்பதற்கான அறிகுறிகளைக் கண்டறியும் முன்பே அழிந்துவிடும் அபாய நிலையில் இருப்பதை உணர முடிகிறது.

÷சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு உலகின் மொத்த வனங்களின் பரப்பளவு 70,000 லட்சம் ஹெக்டேர். இந்தியாவில் ஆண்டுதோறும் 15 லட்சம் ஹெக்டேர் வனப்பகுதி குறைந்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது. நாட்டின் வளங்களில் மூன்றில் ஒரு பங்கு வன வளம் இருக்க வேண்டும். அதாவது 30 சதவீதம் இருக்க வேண்டிய வனங்கள், தற்போது 19 சதவீதமாக உள்ளன. தமிழகத்தில் 13 சதவீதக் காடுகள்தான் இருக்கின்றன. காடுகள் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவதுடன், மண் அரிப்பைத் தடுத்து நிறுத்தி, சீதோஷ்ண நிலையைச் சமன் செய்கின்றன.

÷பல்லுயிர்ப் பெருக்கம் அழிந்து வருவதற்கு தட்பவெப்ப நிலை மாற்றம்தான் காரணம். அதிகரித்து வரும் வெப்பத்தால் உயிர்த் தாவரங்கள் அழியும் அபாயம் இருப்பதையும் மறுப்பதற்கில்லை.

÷அதிகரித்து விட்ட பிளாஸ்டிக் பயன்பாடு, இயற்கைப் பாசன முறையிலிருந்து விலகிச் சென்றதன் விளைவு, நிலப் பயன்பாட்டின் மாற்றம், காற்றை மாசுபடுத்தும் எரிபொருள்கள், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் வாயு கலந்த புகை, பெருமளவில் வெளியேற்றப்படும் கழிவு நீர் போன்றவை புவி மண்டலத்தை வெப்பமடையச் செய்கின்றன.

புவி வெப்பம் அதிகரிப்பதால் அதிக வெள்ளப் பெருக்கு, அதேநிலையில் கடும் வறட்சியையும் தருகிறது. தட்பவெப்ப நிலையில் உருவான மாற்றத்தால், போதிய நீர்வளம் இன்றி நீர்வரத்து குறைந்து மிகவும் பாதிப்பைத் தருகிறது. மழை வளம் குறைந்து விட்டது.

நதிகள் இன்றைய சூழலில் கழிவுகளைத் தாங்கும் பள்ளமாக மாறி வருவதுதான் வேதனையானது. பெருநகரங்களில் இயங்கும் பெரும்பாலான தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர், நீர் நிலைகளில் கலப்பதால், பிராணவாயு குறைந்து நீர்வாழ் உயிரினங்கள் பெருமளவு அழியும் சூழல் உள்ளது.

÷நகர விரிவாக்கம், சாலை விரிவாக்கம் செய்யப்படுவதால் அந்நகரங்களை அடுத்துள்ள கிராமங்களில் பெருமளவில் மரங்கள் வெட்டப்படுகின்றன. இதனால், மரங்களில் கூடுகட்டி வாழும் பறவையினங்கள், நிழலில் ஒதுங்கும் விலங்கினங்கள் தங்க இடமின்றி அழிந்துபோகின்றன.

÷மரங்கள் குறைந்ததால் வெப்பம் அதிகரித்து உயிரினங்கள் அழிவைச் சந்தித்து வருகின்றன. இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டதால் இன்று அளவுக்கு அதிகமான வெப்பத்தை உணருகிறோம்.
÷இயற்கை வளங்கள், மனிதன் உயிர் வாழ பல அற்புதங்களை நமக்கு அளித்து வருகின்றன. நாம் சுவாசிக்கும் காற்றிலிருந்து நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்களையும் இயற்கை தருகிறது.
இயற்கை வளமிக்க பசுமையான சோலைகள், காடுகள், மரங்கள், உயிரினங்கள், புல்வெளிகள், விளைநிலங்கள், ஆறுகள், ஏரிகள், கடலோர நீர் வளம் போன்றவை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்று.

÷எனவே, இயற்கை வளங்களைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமை மட்டுமல்ல, பொறுப்பும் கூட. இயற்கை வளங்களின் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவை அழிவதைத் தடுக்க அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**"புகையிலை விவசாயிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'**

புகையிலை விளைவிக்கும் விவசாயிகளைப் பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மைசூரு பாஜக மக்களவை உறுப்பினர் பிரதாப் சிம்ஹா கேட்டுக்கொண்டுள்ளார்.

பெங்களூரில் சனிக்கிழமை இந்திய புகையிலை மையம் சார்பில் சிறந்த புகையிலை விளைவிக்கும் விவசாயிகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் விழா நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு அவர் பேசியது: இந்தியாவில் நெல், கேழ்வரகு, கோதுமை விளைவிப்பது போல், புகையிலையை விளைவிக்கும் விவசாயிகளும் நிறைய பேர் உள்ளனர். ஆனால், மற்ற விவசாயிகளைப்போல், புகையிலையை விளைவிக்கும் விவசாயிகளை உரிய வகையில் யாரும் ஊக்குவிப்பதில்லை.

கர்நாடகத்தில் பல ஆண்டுகளாக புகையிலை விளைவிக்கும் விவசாயிகள் ஏராளமாக உள்ளனர். புகையிலையை பயன்படுத்தினால் புற்றுநோய் உள்ளிட்டவை வரும் என்பது ஒரு புறமிருந்தாலும், புகையிலைக்கு பல்வேறு மருத்துவக் குணங்கள் உள்ளதை யாரும் மறுக்க முடியாது.

வெளிநாடுகளுக்கு புகையிலை ஏற்றுமதி செய்வதன் மூலம் அரசுக்கு அந்நியச் செலாவணி கிடைத்து வருகிறது. புகையிலை விவசாயத்தை நம்பியுள்ள விவசாயிகள் வேறு விவசாயத்துக்கு உடனடியாக மாறி விடுவதென்பது முடியாத காரியம். கரும்பு விவசாயிகள் தொடர்ந்து தற்கொலை செய்து கொண்டு வரும் நிலையில், புகையிலை விவசாயிகளைப் பாதுகாப்பது அரசின் கடமை. புகையிலை விவசாயிகளைப் பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், சாம்ராஜ்நகர் காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் துருவநாராயணா, மண்டியா மஜத மக்களவை உறுப்பினர் சி.எஸ்.புட்டராஜ், இந்திய புகையிலை மையத்தின் ஒப்பந்தப்புள்ளி பிரிவு இயக்குநர் பிஹாரி சௌத்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மழைநீர் சேமிப்பு முறையை நிறுவாவிட்டால் அபராதம்**

கட்டடங்களில் மழைநீர் சேமிப்பு முறையை நிறுவாவிட்டால், அபராதமாக 8 மடங்கு ரசீது கட்டணம் வசூலிக்கப்படும் என பெங்களூரு குடிநீர் வடிகால் வாரியம் எச்சரித்துள்ளது.

நிலத்தடி நீரின் அளவை உயர்த்தும் நோக்கில், புதிய மற்றும் பழைய கட்டடங்களில் மழைநீர் சேமிப்பு முறையை நிறுவ கட்டட உரிமையாளர்களைக் கட்டாயப்படுத்தும் சட்டம் 2009-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.

ஆனால், மழைநீர் சேமிப்பில் மக்கள் ஆர்வம் காட்டியதாக தெரியவில்லை. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானோர் புதிய கட்டடங்களை கட்டி வருகிறார்கள். ஆனால், ஆண்டுக்கு 4 ஆயிரம் பேர் மட்டுமே மழைநீர் சேமிப்பு முறையை கட்டடங்களில் நிறுவுகின்றனர். இதை அறிந்த பெங்களூரு குடிநீர் வடிகால் வாரியம், சட்டத்தை தீவிரமாக அமல்படுத்த, அபராதமாக 8 மடங்கு ரசீது கட்டணத்தை வசூலிக்க திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து வாரிய உதவி பொறியாளர் பி.எம்.மஞ்சுநாத் கூறியது: மழைநீர் சேமிப்பு முறையை கட்டாயமாக்கும் சட்டம் 2009-இல் அமலுக்கு வந்தது. 2011-12-ஆம் ஆண்டில் அதிகளவில் கட்டட உரிமையாளர்கள் மழைநீர் சேமிப்பு முறையை நிறுவினர். இதுதொடர்பாக வார்டு அளவில் எம்எல்ஏ-க்கள், மாமன்ற உறுப்பினர்கள் துணையுடன் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், 1700 குழாய் பழுது பார்ப்போர், கட்டடக் கலைஞர்கள், கட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 2012-இல் ஜெயநகரில் மழைநீர் சேமிப்பு முறையை விளக்கும் பூங்கா அமைக்கப்பட்டது.

லட்சக்கணக்கானோர் இதை பார்த்திருந்தாலும், அதை செயல்படுத்தியவர்கள் மிகவும் குறைவே.

மழைநீர் சேமிப்பு முறையை நிறுவினால், ஆண்டில் 9 முதல் 11 மாதங்களுக்கு வாரியத்தின் தண்ணீரை சார்ந்திருக்க வேண்டியதில்லை என்றார்.

வாரியத்தின் தலைவர் டி.எம்.விஜய்பாஸ்கர் கூறுகையில், மழைநீர் சேமிப்பு முறை நிறுவாத வீடுகளுக்கு வணிகரீதியான தண்ணீர் கட்டணத்தை விதிக்க யோசித்து வருகிறோம். அதாவது, வீட்டு தண்ணீர் ரசீது கட்டணத்தைக் காட்டிலும் 8 மடங்கு கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படும்.

அக்.8-ஆம் தேதி நடக்கும் வாரியக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் பெறப்படும். மழைநீர் சேமிப்புமுறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட பிறகும், பலர் அதை நிறுவவில்லை. எனவே, அபராதமாக கட்டணத்தை உயர்த்தி வசூலித்தால் தானாகவே அனைவரும் மழைநீர் சேமிப்பு முறையை நிறுவத் தொடங்குவார்கள் என்றார்.

**விவசாயிகளின் பிரச்னைகளை விவாதிக்க சிறப்பு சட்டப்பேரவைக் கூட்டம்**

விவசாயிகளின் பிரச்னைகள் குறித்து விவாதிக்க, சிறப்பு சட்டப்பேரவைக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என முன்னாள் முதல்வர் எடியூரப்பா கேட்டுக்கொண்டுள்ளார்.

கர்நாடக மாநிலம், ஹுப்பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியது: மாநிலத்தில் விவசாயிகள் தொடர்ந்து தற்கொலை செய்து கொள்வது அதிகரித்து வருகிறது. இதற்கு காரணம் விவசாயிகள் பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வருகின்றனர். விவசாயிகள் பிரச்னை குறித்து விவாதிக்க சிறப்புக் கூட்டத்தை முதல்வர்

சித்தராமையா கூட்ட வேண்டும். சிறப்புக் கூட்டத்தில் விவசாயிகளின் பிரச்னையோடு, மின்தட்டுப்பாடு, மகதாயி கால்வாய் பிரச்னை, குடிநீர்ப் பிரச்னை, ஐஐடி அமைப்பது தொடர்பான பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும்.

மகதாயி கால்வாய் திட்டம் தொடர்பாக தில்லியில் அனைத்துக் கட்சி குழுவினர் பிரதமரை சந்தித்த பிறகு, முதல்வர் சித்தராமையா பிரதமரை பற்றி தவறான கருத்துகளை கூறி வருகிறார். மகதாயி கால்வாய் திட்டம் குறித்து காங்கிரஸ் கட்சியினர் கோவா, மகாராஷ்டிர முதல்வர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி ஒப்புதல் பெற்றால், பிரதமர் நரேந்திரமோடியும் இந்த விவகாரத்தில் தலையிட ஒப்புதல் பெற்றுத் தரப்படும். ஆனால், இந்த விவகாரத்தில் காங்கிரஸார் மக்களை திசைதிருப்பும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கர்நாடகத்தில் மைசூரு, தார்வாட், ராய்ச்சூர் உள்ளிட்ட இடங்களில் ஐஐடி அமைக்கலாம் என மத்திய அரசிடம் அறிக்கை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், தார்வாடில் ஐஐடி அமைக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந் நிலையில், ராய்ச்சூரில் ஐஐடி அமைக்க வேண்டும் என சித்தராமையா கடிதம் எழுதுவதில் அரசியல் நோக்கம் உள்ளது.

எனது ஆட்சியின்போது 2 முறை கூட்டுறவு வங்கிகள் விவசாயக் கடனையும், தேசிய வங்கிகளில் கடனுக்கான வட்டியும் ரத்து செய்யப்பட்டது. ஆனால், காங்கிரஸ் அரசு விவசாயக் கடனை ரத்து செய்யாமல், வட்டியை மட்டுமே ரத்து செய்துள்ளது. காங்கிரஸ் அரசுக்கு விவசாயிகள் மீது அக்கறை இல்லை என்பதையே இது காட்டுகிறது என்றார்.

## திருவாரூர், நாகை மாவட்டங்களுக்கு 3,352 டன் யூரியா வருகை

திருவாரூர், நாகை மாவட்டங்களுக்கு சம்பா சாகுபடிக்காக 3,352 மெட்ரிக் டன் யூரியா உரம் ஓமன் நாட்டிலிருந்து ஞாயிற்றுக்கிழமை வந்தது.

திருவாரூர், நாகை மாவட்டங்களில் தற்போது நேரடி நெல் விதைப்பின் மூலம் 1.50 லட்சம் ஹெக்டேரில் சம்பா சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இதற்கு தேவையான உரங்களை கூட்டுறவு சங்கம் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் விவசாயிகள் வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் ஓமன் நாட்டிலிருந்து யூரியா உரம் ஆந்திர மாநிலம் கிருஷ் ணாபட்டணம் துறைமுகத்துக்கு வந்தது.

அங்கிருந்து இப்கோ உர நிறுவனத்தின் சார்பில் 50 கிலோ கொண்ட மூட்டைகளாக பிரித்து, 58 ரயில் வேகன்களில் 3,352 டன் யூரியா அனுப்பிவைக்கப்பட்டு, அந்த உரம் திருவாரூர் ரயில் நிலையத்துக்கு ஞாயிற்றுக்கிழமை வந்தது.

ரயில் நிலையத்திலிருந்து தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையத்தின் அலுவலர்கள், உர மூட்டைகளை லாரிகளில் ஏற்றி, திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 67 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்துக்கும், நாகை மாவட்டத்தில் உள்ள 33 கூட்டுறவு கடன் சங்கத்துக்கும் அனுப்பிவைத்தனர்.

## 16,100 ஏக்கரில் இயந்திர நடவுப் பணி

திருவாரூர் மாவட்டத்தில் குறுவைத் தொகுப்பு உதவித் திட்டத்தின்கீழ் ரூ. 3.82 கோடியில் வேளாண் பொறியியல் துறை மூலம் 16,100 ஏக்கரில் இயந்திர நடவுப் பணி செய்யப்பட்டுள்ளது.

கா௦நாடகம் காவிரி நீரை முறையாக வழங்காதது, போதிய மழை பெய்யாதது உள்ளிட்ட காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாக குறுவை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளையும், விவசாயத்தையும் பாதுகாக்க தமிழக அரசு குறுவை தொகுப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இயந்திர நடவு, இயந்திர உழவு, டீசலுக்கு மானியம் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. 2015 குறுவைத் தொகுப்புத் திட்டத்தில் மாவட்டத்தில் தற்போது இயந்திர நடவு நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து கோட்டூர் வேளாண் பொறியியல்துறை உதவிப் பொறியாளர் வி. பாஸ்கரன் கூறியது:

மாவட்டத்தில் 33,380 ஏக்கர் இயந்திர நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திருவாரூர், கோட்டூர் உள்ளிட்ட மாவட்டம் முழுவதும் 240 நடவு இயந்திரம் மூலம் 16,100 ஏக்கரில் நடவுப் பணி முடிந்துள்ளது.

நடவுப் பணியின்போது திருந்திய நெல் சாகுபடி முறையில் கூடுதல் மகசூல் பெற விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது என்றார் அவர்.

குறுவைத் தொகுப்புத் திட்டத்தில் பயன்பெற்ற செருவாமணி விவசாயி வெ. சத்தியநாராயணன் கூறியது:

அரசின் இயந்திர நடவால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு சுமார் 5,000 வரை செலவு மீதப்படுகிறது.

தவிர திருந்திய நெல் சாகுபடி முறையை சரியாக கடைப்பிடித்தால் ஏக்கருக்கு 2 டன்னுக்கு அதிகமாக மகசூல் கிடைக்கிறது.

இயந்திர நடவில் ஏக்கருக்கு ரூ. 2,375 முழு மானியம் அரசு வழங்குவது விவசாயிகளுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருக்கிறது என்றார் அவர்.

**மூங்கில் மரங்களை வளர்க்க நுகர்வோர் பாதுகாப்புக் குழு கோரிக்கை**

24 மணி நேரமும் ஆக்சிஜனை வழங்கும் மூங்கில் மரங்களை நெடுஞ்சாலையோரத்தில் வளர்க்க வேண்டும் என நுகர்வோர் பாதுகாப்புக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருப்பூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு குழுக் கூட்டம் திருமுருகன்பூண்டியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு, மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுத் தலைவர் காதர்பாட்சா தலைமை வகித்தார்.

மாவட்ட பொதுச் செயலாளர் ராமலிங்கம், துணைத் தலைவர் அவிநாசிலிங்கம், அமைப்புச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆலோசகர்கள் முருகானந்தன், பழனிச்சாமி, வேல்முத்துகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு குழுத் தலைவர் காதர்பாட்சா பேசியதாவது: 24 மணி நேரமும் ஆக்சிஜனை வழங்கும் மூங்கில் மரங்களை நெடுஞ்சாலையோரத்தில் வளர்க்க வேண்டும். இல்லையெனில், ஓசோன் படல அடர்த்தி 280 முதல் 300 மி.மீ வரை உள்ளதை தக்க வைக்க இயலாமல் போகும். நெடுஞ்சாலையில் வடியும் மழைநீர் விரையமாகிக் கொண்டிருக்கின்றன.

சேவை மனப்பான்மை கொண்ட தொழிற்சாலை, வர்த்தக நிறுவனங்கள், தனியார் பள்ளி, கல்லூரி நிறுவனங்கள், வங்கிகள் ஆகியோரின் சேவைகளைப் பயன்படுத்தி, சாலையோரத்தில் பாதுகாப்பான மழைநீர் தடுப்பணைகளைத் தாழ்வான பகுதிகளில் ஆங்காங்கே ஏற்படுத்தி, மூங்கில் சோலைகளை உருவாக்கலாம்.

வாகன எரிபொருள் ஹைட்ரோ கார்பன், கார்பன் மோனாக்சைடாகி, கரியமில வாயுவின் அடர்த்தியை அதிகப்படுத்துவதை மூங்கில் சோலைகள் முற்றிலும் தடுத்துவிடும். மேலும், வருங்கால சந்ததிகள் காற்று மாசு இல்லாத சுகாதாரமான சுற்றுச்சூழலை அனுபவிக்க, இந்திய மண் சார்ந்த மூங்கில் மரங்களை வளர்க்க வேண்டும் என்றார்.

**பருவநிலை மாற்றம் குறித்த கருத்தரங்கு**

கோத்தகிரி நீர் அறக்கட்டளை சார்பில் பருவநிலை மாற்றம் குறித்த கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இக்கருத்தரங்குக்கு அறக்கட்டளையின் அறங்காவலர் அகரம்சிவா தலைமை வகித்தார். நிர்வாகிகள் சங்கப்பிள்ளை, கண்ணன், பாலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மணியன் வரவேற்றார்.

இதில் உதகை கல்லூரிப் பேராசிரியர் ஞானசூரியன், பசுமை அறக்கட்டளை ஆனந்த ராஜா, தம்பிராசா உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகள் குறித்துப் பேசினர். தொடர்ந்து தாகம் தண்ணீர் என்ற குரும்படம், பாலையாகும் தமிழக விவசாயம் என்ற ஆவணப்படம் திரையிடப்பட்டது.

இதைத்தொடர்ந்து, கோத்தகிரியில் ஆழ்துளைக் கிணறு அமைத்து நிலத்தடி நீரை உறிஞ்சுவைத் தடுத்த வேண்டும். தேயிலை விவசாய நிலங்களை அழித்து கட்டடம் கட்டு வதை தடுக்க வேண்டும். பூமி வெப்பமயமாகி மண்ணில் ரசாயன மாற்றத்தை ஏற்படுத் தும் கொய்மலர் சாகுபடி என்ற மலர் சாகுபடி திட்டத்தை நிறுத்த வேண்டும் ஆகியவை வலியுறுத்தப்பட்டன.

இதில் ராஜேந்திரன், புஷ்பலதா, சாந்த குமாரி, கலா, கிருஷ்ணராஜ், முனிரத்தினம் உள்பட பலர் கலந்து கொண்டனர். திட்ட ஒருங்கிணைப்பாளர் ராமக்கிளி நன்றி கூறினார்.

**தோட்டக்கலைத் துறை வளர்ச்சிப் பணிகள் ஆய்வு**

தோட்டக்கலைத் துறையின் சார்பில் கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் சனிக்கிழமை நேரில் ஆய்வு செய்தார்.

கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தில் பந்துமை மற்றும் அனியாடா பகுதிகளிலுள்ள விவசாயிகளின் நிலங்களுக்கு சென்ற ஆட்சியர், அங்கு சுமார் 16,000 ச.மீ. பரப்பளவில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் சார்பில் பசுமைக் குடில்கள் அமைத்து காரனேசன் மலர்கள் உற்பத்தி செய்யப்படுவதை நேரில் பார்வையிட்டார்.

அப்போது, காரனேசன் மலர்ச் செடிகளில் 6 மாதத்தில் விளைச்சல் தொடங்கி 3 பருவங்களில் ஒன்றரை வருடத்தில் தொடர்ச்சியாக மகசூல் கிடைக்குமென விவசாயிகள் தெரிவித்தனர். மேலும், இப்பகுதியிலுள்ள 4 விவசாயிகள் இரண்டரை ஏக்கர் பரப்பளவுக்கு ரூ. 17.5 லட்சம் அரசு மானியம் பெற்றுள்ளதாகவும், 3 பருவங்களில் ரூ. 75 லட்சத்துக்கு பூக்கள் விலையாகுமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தனர்.

அதையடுத்து, அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மானியத்துடன் கூடிய திட்டத்தின் கீழான குளிர்பதன நிலையத்தை ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் ஆட்சியர் தெரிவித்ததாவது:

தோட்டக்கலைத்துறையின் சார்பில் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் தோட்டக்கலை பயிர்கள் மேம்பாட்டுக்காக பல்வேறு புதிய திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு

வருகின்றன. இதன்மூலம் காய்கறிகளின் உற்பத்தி திறன் 20 சதம் அதிகரித்துள்ளதோடு, மலர்களின் உற்பத்தி பரப்பளவும் சுமார் 83 ஹெக்டேர் பரப்பளவு அதிகரித்துள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் பசுமைக் குடில்கள் அமைக்க மானியம் வழங்கப்பட்டுள்ளதால் 9 ஹெக்டேர் பரப்பளவில் மலர் சாகுபடி அதிகரித்துள்ளது. நுண் நீர் சாகுபடி திட்டத்தின் கீழ் 700 ஹெக்டேர் பரப்பளவில் காய்கறி சாகுபடி கூடுதலாக அதிகரித்துள்ளது என்றார்.

இந்த ஆய்வின்போது, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி, துணை இயக்குநர் சிவசுப்ரமணியம் மற்றும் உதவி இயக்குநர் டாக்டர் ராம்சுந்தர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### தென்மேற்கு பருவமழை: 14 சதவீதம் பற்றாக்குறை

இந்தியாவில் தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு 14 சதவீதம் குறைவாக பெய்துள்ளது.

இந்தியாவில் கடந்த ஜூன் 5-ஆம் தேதி முதல் தென்மேற்கு பருவமழை தொடங்கியதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. முதலில் சராசரியாக மழை இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தொடக்கத்தில் சராசரிக்கும் அதிகமான மழை பல இடங்களில் பெய்தது. பின்னர், மழைப் பொழிவு படிப்படியாகக் குறைந்து, தற்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.



ஜூன் 1-ஆம் தேதி முதல் செப்டம்பர் 30-ஆம் தேதி வரை தென்மேற்கு பருவமழை காலமாகும். இந்த ஆண்டு அந்தக் காலக்கட்டத்தில் நாட்டில் 760.6 மி.மீ. மழையே பெய்துள்ளது.

இது, நீண்ட கால சராசரியைக் காட்டிலும் 14 சதவீதம் குறைவாகும். நீண்ட கால சராசரியாக இந்தக் காலத்தில் 887.5 மி.மீ. மழை பெய்திருக்க வேண்டும்.

வடமேற்கு இந்தியாவில் தற்போது 17 சதவீதமும், மத்திய இந்தியாவில் 16 சதவீதமும், வடகிழக்கு, கிழக்கு இந்தியாவில் 8 சதவீதம் குறைவான மழையும் பெய்துள்ளது. தென் தீபகற்பத்தில் 15 சதவீதம் மழை பெய்துள்ளது.

செப்டம்பர் 24-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை நாட்டில் 62 சதவீதம் குறைவாக மழை பெய்துள்ளது.

தொடர்ந்து 2-ஆவது முறை: நாட்டில் தென்மேற்கு பருவமழை பற்றாக்குறையாக பெய்வது தொடர்ந்து 2-ஆவது முறையாகும். கடந்த ஆண்டும் பற்றாக்குறையாகவே மழை பெய்துள்ளது. அப்போது, 781.7 மி.மீ. மழை பதிவானது. இது 12 சதவீதம் பற்றாக்குறையாகும்.

இதேபோல, கடந்த 2001-ஆம் ஆண்டில் இருந்து கணக்கிட்டதில், 2015-இல் 4-ஆவது முறையாக பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இந்தியாவில் 312 மாவட்டங்களில் சராசரி அல்லது கூடுதல் மழையும், 302 மாவட்டங்களில் பற்றாக்குறை மழையும் பெய்துள்ளது.

இந்த நிலையில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து தென்மேற்கு பருவமழை பின்வாங்கத் தொடங்கியுள்ளது. பருவமழையின் தாக்கம் இன்னும் சில நாள்களுக்கு இருந்தாலும், போதுமான மழை பெய்ய வாய்ப்பில்லை என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரித்தனர்.



இதுவரை தென்மேற்கு பருவமழை நிலவரம்

| ஆண்டு | சதவீதம் |
|---|---|
| 2005 | -1.3 |
| 2006 | -0.4 |
| 2007 | 5.7 |
| 2008 | -1.7 |
| 2009 | -21.8 |
| 2010 | 2 |
| 2011 | 1.6 |
| 2012 | -7.1 |
| 2013 | 5.7 |
| 2014 | -12 |
| 2015 | -14 |

## சின்னக்கல்லார் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு



கேரள வனப்பகுதியின் செழிப்பிற்காகவும், வன விலங்குகளின் குடிநீர் தேவைக்காகவும் சின்னக்கல்லார் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

நதிநீர் பங்கீடு

பரம்பிக்குளம்- ஆழியாறு திட்டத்தின் அடிப்படை அணையான சோலையார் அணை, சின்னக்கல்லார் அணை போன்றவை வால்பாறை பகுதியில் அமைந்துள்ளன. இந்த அணைகளில் இருந்து நதிநீர் பங்கீடு ஒப்பந்தப்படி கேரளாவுக்கு ஆண்டுதோறும் தண்ணீர் திறந்து விடுவது வழக்கம்.

ஆண்டு தோறும் தென்மேற்கு பருவமழை மூலம் கிடைக்கும் தண்ணீரை கொண்டு செப்டம்பர் 1-ந் தேதிக்குள் வால்பாறையை அடுத்துள்ள கேரள சோலையார் அணையை நிரப்ப வேண்டும். இதன்படி தண்ணீர் திறக்கப்பட்டு, கேரள சோலையார் அணை நிரப்பப்பட்டது.இதே போல் தமிழக கேரள நதிநீர் பங்கீடு ஒப்பந்தப்படி ஆண்டுதோறும் அக் டோபர் மாதம் 1-ந் தேதி முதல் ஜனவரி 31-ந் தேதி வரை வால்பாறையை அடுத்துள்ள சின்னக்கல்லார் அணைக்கு வரும் தண்ணீர் முழுவதையும் கேரள வனப்பகுதியின் செழிப்பிற்காகவும், வனவிலங்குகளின் தேவைக் காகவும் திறந்து விட வேண்டும்.

தண்ணீர் திறப்பு

சின்னக்கல்லார் அணையில் இருந்து நேரடியாக கேரளாவுக்கு தண்ணீர் திறக்க இயலாது. இதனால் அங்கிருந்து நீரார் அணைக்கு தண்ணீர் திறக்கப்படும். சின்னக்கல்லார் அணையில் இருந்து வரும் தண்ணீரின் அளவுக்கு ஏற்ப நீரார் அணையில் இருந்து கேரளாவுக்கு திறக்கப்படும்.இதன்படி பொதுப்பணித்துறை அதிகாரிகள் சின்னக் கல்லாரின் அடிமட்ட மதகை திறந்து விட்டனர். அங்கிருந்து வெளியேறிய தண்ணீர் நீரார் அணையை வந்தடைந்தது. இதைத்தொடர்ந்து நேற்று நீரார் அணையின் அடிமட்ட மதகு திறக்கப்பட்டு அதன் வழியாக வினாடிக்கு 185.02 கன அடி தண்ணீர் கேரளாவுக்கு வெளியேற்றப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் தேதி வரை தண்ணீர் திறக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மும்பை கிர்காவ் கடற்கரையில் குவிந்த டால்பின்களால் பொதுமக்கள், குழந்தைகள் உற்சாகமாக கண்டுகளித்தனர்



மும்பை,

மும்பை கிர்காவ் கடற்கரையில் குவிந்த டால்பின்கள் கடலில் துள்ளிக்குதித்து நடனமாடின. இதை பொதுமக்கள், குழந்தைகள் கூடி கண்டுகளித்தனர்.

<u>கிர்காவ் கடற்கரை</u>

மும்பையில் மெரின்லைன் பகுதியில் கிர்காவ் கடற்கரை உள்ளது. இந்த கடற்கரையில் நேற்று முன்தினம் மாலையில் பொதுமக்கள் அளவுக்கு அதிகமாக கூடி இருந்தனர். இவர்களுக்காக இயற்கையே ஒரு அழகிய காட்சியை அரங்கேறியது போல, திடீரென கடலில் டால்பின்கள் ஒன்றாக கூடி மேலே உற்சாகமாக துள்ளிகுதித்து ஆட்டம் போட்டன. இதனை கண்ட அங்கிருந்த குழந்தைகள், பொதுமக்கள் ஆச்சரியத்தில் உறைந்தனர். மேலும் இதுகுறித்து தகவல் அறிந்த பலரும் கடற்கரையில் குவியத்தொடங்கினர். கடலில் நடன நிகழ்ச்சி நடப்பதுபோல் அதை கண்டுகளித்து மகிழ்ச்சி அடைந்தனர்.

இது பற்றி தகவல் அறிந்த மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மீன்வளத்துறை அதிகாரி கிர்காவ் கடற்கரைக்கு விரைந்து வந்து பார்வையிட்டனர்.

<u>காலநிலை மாற்றம்</u>

இது குறித்து அவர்கள் தெரிவிக்கையில், “ பொதுவாக மராட்டிய மாநிலத்தில் ராய்காட் மற்றும் சிந்துதுர்க் கடற்கரையில் மட்டும் தான் டால்பின்கள் வருவது வழக்கம். ஆனால் தற்போது மும்பை கடற்கரையிலும் 30–க்கு மேற்பட்ட டால்பின்கள் கடலில் உலாவருவதை காண முடிகிறது. இதற்கு காலநிலை மாற்றமும் ஒரு காரணமாக இருக்கக்கூடும், இது பற்றி ஆய்வுகள் நடத்தி வருகிறோம் என்றனர்.

சமீபத்தில் மும்பை மெரின்லைன் கடற்கரையில் இறந்த நிலையில் டால்பின்கள் கரை ஒதுங்கியது நினைவுகூரத்தக்கது.

## தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 20,000 கிலோ பிளாஸ்டிக் பாட்டில்கள் சேகரித்து சாதனை



மும்பை,

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 20 ஆயிரம் கிலோ பிளாஸ்டிக் பாட்டில்களை சேகரித்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

<u>சாதனை முயற்சி</u>

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அதிகளவு பழைய பிளாஸ்டிக் பாட்டில்களை சேகரித்து லிம்கா, கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெறும் முயற்சியில் தனியார் குடிநீர் பாட்டில் நிறுவனம் ஒன்று ஈடுபட்டது. பழைய பாட்டில்களை சேகரிக்கும் பணியில் மும்பையை சேர்ந்த 100 பள்ளிகளை சேர்ந்த 2 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் ஈடுபட்டனர். பின்னர் மாணவர்கள் சேகரித்த பழைய பாட்டில்கள் அனைத்தும் எல்பின்ஸ்டன் ரோட்டில் உள்ள காம்கர் விளையாட்டு மைதானத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டது.

<u>20 ஆயிரம் கிலோ பாட்டில்கள்</u>

மாணவர்கள் சேகரித்த பழைய பிளாஸ்டிக் பாட்டில்கள் 20 ஆயிரம் கிலோ இருந்தது. இதற்கு முன் 13 ஆயிரத்து 408 கிலோ பிளாஸ்டிக் பாட்டில்கள் சேகரித்ததே சாதனையாக இருந்தது. இதன்மூலம் 20 ஆயிரம் கிலோ பிளாஸ்டிக் பாட்டில்களை சேகரித்து புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. 20 ஆயிரம் கிலோவில் ஏறக்குறைய 10 லட்சம் பிளாஸ்டிக் பாட்டில்கள் இருக்கும் என கூறப்படுகிறது. மாணவர்கள் சேகரித்த பிளாஸ்டிக் பாட்டில்கள் மறுசுழற்ச்சியின் மூலம் தலையணை உறை, தொப்பி, துணி மற்றும் பை தயாரிக்க பயன்படுத்தப்பட உள்ளது.

## பாகூர் பகுதியில் 50 மி.மீ. மழை 100 ஏக்கர் நெல் வயலில் மழைநீர் புகுந்தது



பாகூர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 50 மி.மீ. மழை பெய்ததில் 100 ஏக்கர் சம்பா நெல் வயல்களில் மழைநீர் புகுந்து தேங்கியுள்ளது.

50 மி.மீ. மழை

புதுவை மாநிலம் பாகூர் பகுதியில் சம்பா நெல் நடவு பணிகள் கடந்த சிலநாட்கள் முன்பு தொடங்கியது. இதில் 25 சதவீதம் விவசாயிகள் நெல் நடவு செய்துள்ளனர்.இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு பாகூர் பகுதியில் இடி, மின்னலுடன் கூடிய கன மழை பெய்தது. இந்த மழை 50 மி.மீ. பதிவானது. திடீரென்று பெய்த பலத்த மழையால் பாகூர் மற்றும் சுற்றுப்புற பகுதியில் உள்ள சுமார் 100 ஏக்கர் சம்பா நெல் வயல்களில் மழைநீர் புகுந்து தேங்கியது.

விவசாயிகள் கவல

இதனால் நேற்று காலை விவசாயிகள் வயலில் உள்ள மழைநீரை வெளியேற்ற பல்வேறு நடவடிக்கை எடுத்தனர். ஆனால் வயல் வெளியில் உள்ள வடிகால் வாய்க்கால்கள் பெரும்பாலானவை தூர்வாரப்படாததால் மழைநீர் வெளியேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டது.பரிக்கல்பட்டு, கன்னியகோவில் உள்பட பல்வேறு கிராமங்களில் உள்ள நெல் வயல்களில் மழைநீர் குளம்போல் தேங்கியுள்ளது. இந்த மழைநீர் 2, 3 நாட்களுக்கு மேல் வயல்களில் தேங்கி நின்றால் நெற் பயிர்கள் அழுகும் அபாயம் உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். வாய்க்கால்களை தூர்வார வேண்டும்இது குறித்து விவசாயி மஞ்சனி மற்றும் சித்தேரி வாய்க்கால் நீர்ஆதார கூட்டமைப்பு தலைவர் சந்திரசேகர் ஆகியோர் கூறுகையில், கடந்த 2 ஆண்டுகளால் பாகூர் பகுதியில் உள்ள பெரும்பாலான வாய்க்கால் தூர்வாரப்படாமலும், ஆக்கிரமிப்பாலும் மழை நீரை சேகரிக்க முடியாமல் உள்ளது. எனவே மழைக்காலத்துக்கு முன்பு வாய்க்கால்களை தூர்வார அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர்.

## கடலூரில் இடி–மின்னலுடன் பலத்த மழை பூமி குளிர்ந்து



கடலூர்,

விழுப்புரம், கடலூரில் நேற்று இரவு இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் பூமி குளிர்ந்து வெப்பம் தணிந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

விழுப்புரம்

வெப்பச்சலனம் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் வட தமிழகத்தின் அனேக இடங்களில் பரவலான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது. அதன்படி விழுப்புரத்தில் நேற்று அதிகாலை வானில் கருமேகங்கள் சூழ்ந்து இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக இந்த மழை நீடித்தது. இதனால் தாழ:வான பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. திரு.வி.க. வீதி, எம்.ஜி. சாலை, பாகர்ஷா வீதி, காமராஜர் வீதி, கீழ்ப்பெரும்பாக்கம் ரெயில்வே சுரங்கப்பாதை உள்ளிட்ட இடங்களில் தண்ணீர் குளம் போல் தேங்கியது. விழுப்புரம் லட்சுமி நகர்,கம்பன் நகர், தேவநாத சுவாமி நகரில் மழை நீர் குடியிருப்பு பகுதி சுற்றிலும் தேங்கி நிற்பதால் வீட்டைவ விட்டு வெளியே வரமுடியாத நிலை ஏற்பட்டது. இதேபோல் திருக்கோவிலூர், மேல்மலையனூர், திண்டிவனம் என்று மாவட்டம் முழுவதிலும் மழை பெய்தது.

இந்நிலையில் விக்கிரவாண்டி பகுதியில் சூறைக்காற்றுடன் பெய்த மழையில் குத்தாம்பூண்டியில் உள்ள முத்துமாரியம்மன் கோவில் குளத்து

கரையில் இருந்து பழமைவாய்ந்த மரம் ஒன்று இரண்டாக பிளந்து, அங்கிருந்த மின்கம்பம் மீது விழுந்தது. இதனால் அந்த பகுதியில் மின்சாரம் தடைப்பட்டது.

கடலூர்

இதேபோல் கடலூரில் நேற்று மாலை 6 மணியளவில் வானத்தில் கருமேகங்கள் திரண்டு மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. இரவு 8.15 மணியளவில் இடி–மின்னலுடன் மழை பெய்ய தொடங்கியது. சுமார் 45 நிமிடங்கள் இடை விடாது பெய்த மழையால் சாலையோரங்களில் மழைநீர் குளம்போல தேங்கி நின்றதை காண முடிந்தது.

குறிப்பாக மஞ்சக்குப்பம் மைதானம், அண்ணா விளையாட்டு மைதானம், ஆயுதப்படை மைதானம் போன்ற பகுதிகளில் மழை நீர் தேங்கி நின்றது. மஞ்சக்குப்பம், வண்டிப்பாளையம், புதுப்பாளையம் போன்ற முக்கிய சாலைகளில் மழைவெள்ளம் வழிந்தோடியதால் பாதாளசாக்கடை பள்ளம் இருப்பது தெரியாமல் வாகன ஓட்டிகள் பள்ளத்தில் சிக்கி தவித்தனர்.

மின்தடை

கடலூர் லாரன்ஸ் சாலையில் உள்ள சுரங்கப்பாதையில் 2 அடி உயரத்துக்கு மழைநீர் தேங்கி நின்றதால் இருசக்கர வாகன ஓட்டிகள் தத்தளித்தபடி சென்றனர். பலத்த இடி–மின்னலுடன் மழை பெய்ததால் நகரின் சில பகுதிகளில் மின்தடை ஏற்பட்டதால் குடியிருப்பு பகுதிகள் இருளில் மூழ்கியது. மழை நின்ற பிறகு படிப்படியாக மின் விநியோகம் செய்யப்பட்டது. இந்த மழையின் காரணமானக பூமி குளிர்ந்து வெப்பம் தணிந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## லாரிகள் வேலை நிறுத்த போராட்டம்: காய்கறிகளின் விலையில் பாதிப்பு கிடையாது



ஈரோடு,

லாரிகள் வேலை நிறுத்த போராட்டம் நடந்தாலும் ஈரோட்டில் காய்கறிகளின் விலையில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

<u>நேதாஜி மார்க்கெட்</u>

ஈரோடு நேதாஜி மார்க்கெட்டில் காய்கறிகள், பழங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்யப்படுகிறது. ஊட்டி, மேட்டுப்பாளையம், கோவை, சேலம், காட்பாடி, தர்மபுரி, மேட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து லாரிகள், மினி லாரிகள், சரக்கு ஆட்டோக்கள் மூலம் ஈரோட்டிற்கு காய்கறிகள் கொண்டு வரப்படுகிறது.

இந்தநிலையில் கடந்த 3 நாட்களாக லாரிகள் தொடர் வேலை நிறுத்த போராட்டம் நடத்தப்படுவதால் ஈரோட்டிற்கு காய்கறிகளின் வரத்து குறைய வாய்ப்பு உள்ளதாகவும், இதனால் விலை உயரும் அபாயம் உள்ளதாகவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் லாரிகள் வேலை நிறுத்த போராட்டம் நடந்தாலும் சரக்கு ஆட்டோக்கள் மூலம் காய்கறிகள் ஈரோட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. இதனால் ஈரோட்டிற்கு வரும்

காய்கறிகளின் வரத்து குறையவில்லை. மேலும், விலையில் எந்தவித பாதிப்பும் இல்லாததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

விலை குறைவு

கடந்த வாரம் ஊட்டியில் மழை காரணமாக கேரட் வரத்து குறைந்ததால் விலை சற்று அதிகரித்து இருந்தது. ஆனால் தற்போது கேரட்டின் வரத்து அதிகரித்து உள்ளதால் ஒரு கிலோவுக்கு ரூ.20 விலை குறைந்து விற்பனையாகிறது. ஈரோடு நேதாஜி மார்க்கெட்டில் நேற்று விற்பனையான காய்கறிகளின் விலை விவரம் வருமாறு (ஒரு கிலோவில்):–

கேரட் – ரூ.40

பீன்ஸ் – ரூ.40

பீட்ரூட் – ரூ.20

குடை மிளகாய் – ரூ.30

பச்சை மிளகாய் – ரூ.30

முட்டைகோஸ் – ரூ.20

சவ்சவ் – ரூ.20

கத்திரிக்காய் – ரூ.25

சேனைக்கிழங்கு – ரூ.30

உருளைக்கிழங்கு – ரூ.30

முருங்கைக்காய் – ரூ.40

பழைய இஞ்சி – ரூ.120

புதிய இஞ்சி – ரூ.50

தக்காளி – ரூ.20

முள்ளங்கி – ரூ.20

வாழைக்காய் – ரூ.5 (ஒன்று).

## ரூ.3 கோடி மதிப்பிலான தேங்காய்கள் தேக்கம் லாரிகள் வேலைநிறுத்தம் எதிரொலி




லாரிகள் வேலைநிறுத்தம் எதிரொலியாக பரமத்தி வேலூர் பகுதியில் கடந்த 2 நாளில் ரூ.3 கோடி மதிப்பிலான தேங்காய்கள் தேக்கம் ஏற்பட்டு உள்ளது.

தேங்காய் ஏற்றுமதி

நாமக்கல் மாவட்டத்தில் பரமத்தி வேலூர் பகுதியில் இருந்து ஏற்றுமதியாளர்கள், வியாபாரிகள் மற்றும் உள்ளூர் வியாபாரிகள் தனித்தனியாக தேங்காய்களை சேகரித்து வைக்கும் குடோன் வைத்துள்ளனர். இந்த குடோனிற்கு நாமக்கல், கரூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் இருந்து தினந்தோறும் லட்சக்கணக்கான தேங்காய்கள்

கொண்டு வரப்படுகிறது. இந்த தேங்காய்கள் பல்வேறு தேங்காய் மண்டிகள் மூலம் உரிக்கப்பட்டு, தரம் பிரிக்கப்பட்டு மூட்டைகளாக கட்டப்பட்டு லாரிகள் மூலம் தினந்தோறும் வட மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.இதன்படி லாரி ஒன்றுக்கு சுமார் 35 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையிலான தேங்காய்களை மூட்டைகளில் கட்டி ஏற்றுமதி செய்து வருகின்றனர். இந்த தேங்காய்களின் மதிப்பு சுமார் ரூ.4 லட்சம் முதல் 5 லட்சம் வரை தரத்திற்கு தகுந்தவாறு இருக்கும். தினந்தோறும் பரமத்தி வேலூர் தாலுகாவில் இருந்து 30-க்கும் மேற்பட்ட லாரிகள் மூலம் வட மாநிலங்களுக்கு தேங்காய்கள் அனுப்பப்பட்டு வருகிறது. இதன் மொத்த மதிப்பு சுமார் ரூ.1 கோடி முதல் ரூ.1.50 கோடி வரையாகும். இத்தொழிலில் தென்னை மரம் ஏறுபவர்கள், காய்களை சேகரித்து லாரிகளுக்கு ஏற்றுபவர்கள், தேங்காய்களை உரிப்பவர்கள் என நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ரூ.3 கோடி மதிப்பிலான தேங்காய்கள் தேக்கம்இந்நிலையில் அகில இந்திய மோட்டார் வாகன போக்குவரத்து காங்கிரஸ் நேற்று முன்தினம் முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளது. இதனால் லாரிகள் இயக்கப்படாத நிலையில் தேங்காய் தொழிலாளர்கள் வேலையின்றி பாதிக்கப்படுவதோடு, நாள் ஒன்றுக்கு ரூ.1½ கோடி மதிப்புள்ள தேங்காய்கள் வீதம் 2 நாளில் சுமார் ரூ.3 கோடி மதிப்பிலான தேங்காய்கள் தேக்கம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எனவே மாநில அரசு மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாக இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி தேங்காய் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் பாதிக்காத வகையில் உடனடி தீர்வு காணவேண்டும் என நாமக்கல் மாவட்ட தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜீவானந்தம் மற்றும் செயலாளர் பொன்னுசாமி ஆகியோர் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## கல்வராயன்மலை பகுதியில் பெய்த தொடர்மழையால் கோமுகி அணை முழு கொள்ளவை எட்டியது



கச்சிராயப்பாளையம்,

கல்வராயன்மலை பகுதியில் பெய்த தொடர்மழையால் கோமுகி அணை அதன் முழு கொள்ளவை எட்டியுள்ளது. எனவே பாதுகாப்பு கருதி எந்நேரத்திலும் தண்ணீர் திறக்க வாய்ப்பு இருப்பதாக பொதுப்பணித்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

<u>பருவமழை</u>

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழையை காட்டிலும் வடகிழக்கு பருவமழைதான் அதிகளவில் மழை கொடுக்கும். இந்நிலையில், வருகிற 15–ந்தேதிக்கு மேல் வடகிழக்கு பருவமழை தொடங்கும் என்று வானிலை மையம் தெரிவித்து உள்ளது. இதற்கிடையே தற்போது வெப்பசலனம் காரணமாக பரவலாக மழை பெய்து வருகிறது. விழுப்புரம் மாவட்டத்திலும் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதன் மூலம் மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள கோமுகி அணை நிரம்பி அதன் முழு கொள்ளவை எட்டி உள்ளது.

<u>44 அடியாக உயர்வு</u>

கடந்த சில நாட்களாக அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை கொட்டி வருகிறது. இதன் மூலம் கல்படை, பொட்டியம் ஆகிய ஆறுகளின் வழியாக அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து, 46 அடி

கொள்ளளவு கொண்ட அணையில் நேற்றைய நிலவரப்படி 44 அடியாக நீர்மட்டம் உயர்ந்தது. வழக்கமாக அணையில் பாதுகாப்பு கருதி 44 அடி வரையில் மட்டுமே தண்ணீர் தேக்கி வைக்கப்படும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவும் கல்வராயன்மலைப்பகுதியில் கனமழை பெய்தது. இதன் மூலம் அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வரத்து இருந்து வருகிறது. நேற்று மதியம் நிலவரப்படி வினாடிக்கு 200 கனஅடி அளவில் தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. எனவே அணையின் பாதுகாப்பு கருதி வினாடிக்கு 100 கனஅடி நீர் பாழைய பாசன வாய்க்கால் வழியாக கோமுகி ஆற்றில் திறந்துவிடப்பட்டு உள்ளது.

தீவிர கண்காணிப்பு

வடகிழக்கு பருவமழை தொடங்கும் முன்பே, கோமுகி அணையானது அதன் முழு கொள்ளளவை எட்டி இருக்கிறது. எனவே தொடர்ந்து மழை அளவு அதிகரிக்க கூடும் என்பதால், பொதுப்பணித்துறை பொறியாளர் பிரபு தலைமையில் அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் அணைக்கு நீர் வரத்து இருப்பதால், பாதுகாப்பு கருதி ஆற்றில் எந்த நேரத்திலும் தண்ணீர் திறந்து விட வாய்ப்பு இருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தண்ணீர் திறப்பு

இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், இந்த அணை மூலமாக 11 ஆயிரம் ஏக்கர் அளவிலான நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. இந்நிலையில் கடந்த ஒரு மாதமாக பெய்தமழையால் அணை அதன் முழு கொள்ளவை எட்டி வருகிறது. வழக்கமாக சம்பா சாகுபடிக்கு அணையின் தண்ணீர் இருப்புக்கு ஏற்ப அக்டோபர் மாதம் 2–வது வாரத்தில் திறந்து விடப்படுவது வழக்கமாகும். இந்நிலையில் பருவமழை தொடங்கும் முன்பே அணை முழு கொள்ளவை எட்டியிருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது. தற்போது சம்பா சாகுபடி பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறோம் என்றார் அவர்.

## நெல் நடவு எந்திரம் வாங்க ரூ.2 லட்சம் மானியம் கலெக்டர் தகவல்



திருவண்ணாமலை,

நெல் நடவு எந்திரம் வாங்க ரூ.2 லட்சம் மானியம் வழங்கப்படும் என்று, கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

<u>கலெக்டர் ஆய்வு</u>

திருவண்ணாமலையை அடுத்த துரிஞ்சாபுரம், கீழ்பென்னாத்தூர் ஒன்றியங்களில் நடைபெற்று வரும் விவசாய பணிகளை கலெக்டர் ஞானசேகரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். துரிஞ்சாபுரம் பகுதியில் நடந்த ஆய்வுக்கு பின்னர் கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் சோமாசிபாடி புதூரில் திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிடப்பட்ட நெல் பயிரையும், சோமாசிப்பாடி ஊராட்சியில் தோட்டக்கலைத்துறை, தேசிய மூங்கில் இயக்கம் மூலமாக ரூ.15 ஆயிரம் மானியத்துடன் ரூ.30 ஆயிரம் மதிப்பில் மூங்கில் வளர்க்கும் பணியையும் கலெக்டர் பார்வையிட்டார்.

சிறுநாத்தூர் ஊராட்சியில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் மூலம் அமைக்கப்பட்டுள்ள பசுமை குடிலையும் கலெக்டர் பார்வையிட்டார்.

பின்னர் கலெக்டர் ஞானசேகரன் கூறியதாவது:–

ரூ.2 லட்சம் மானியம்

வேளாண்மை துறையில் இரண்டாம் பசுமைப் புரட்சி மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரிக்க பல்வேறு திட்டங்களை முதல் – அமைச்சர் ஜெயலலிதா செயல்படுத்தி வருகிறார். இதன் அடிப்படையில் எந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் பணி பார்வையிடப்பட்டது. இதுபுதிய தொழில் நுட்பம் ஆகும். இதன் மூலம் வேலை ஆட்கள் பற்றாக்குறையால் நடவு பணி பாதிக்கப்பட்ட நிலை மாறி உள்ளது. விவசாயிகளுக்கு அதிக மகசூலும் கிடைக்கும்.

எந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ.3 ஆயிரம் அரசு மானியமும், நெல் நடவு எந்திரம் வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2 லட்சம் மானியமும் வழங்கப்படுகிறது.

விவசாயிகள் இந்த புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அதிக மகசூல் செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின் போது கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அக்கண்டராவ், தாசில்தார் பன்னீர்செல்வம், ஊராட்சி மன்ற தலைவர்கள் உடனிருந்தனர்.

தினகரன்

**அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பரவலாக மழை**




சென்னை: அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வெப்பசலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்து வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் உள்ள அச்சிறுப்பாக்கம், மேல்மருவத்தூர், திருக்கழுகுன்றம், சோத்துபாக்கம் ஆகிய பகுதிகளில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

திருவள்ளூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலும் வெளுத்து வாங்கியது. சேலம் மாவட்டத்தில் நேற்று மாலையில் கனமழை பெய்தது. வெள்ளாறு மற்றும் மேட்டூர் பகுதிகளில் பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் அதிகபட்சமாக 5 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. மேல்மலையனூர், புதுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய இடங்களில் நல்ல மழை பெய்தது. கும்பகோணம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான தேவனாஞ்சேரி, போன்ற இடங்களில் இடி மின்னலுடன் மிதமான மழை பெய்தது

**வட தமிழகத்தில் கனமழை: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு**

சென்னை: வெப்ப சலனம் நீடிப்பதை அடுத்து வட தமிழகத்தில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவமழை காலம் முடிவடைய இன்னும் ஒரு வார காலம் உள்ள நிலையில் தமிழகத்தில் வெப்ப சலனம் தொடர்ந்து நீடித்து வருகிறது. இதனால் கடந்த ஒரு வாரமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. வளி மண்டல மேல் அடுக்கில் உருவான காற்று சுழற்சி தமிழக கடலோரத்தில் நிலை கொண்டுள்ளதால் இரவில் நல்ல மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக தமிழகத்தில் நேற்று செஞ்சியில் 50 மிமீ மழை பெய்துள்ளது.கேரளா, கடலோர கர்நாடகா, லட்சத்தீவு, ஆந்திரா, தெலங்கானா ஆகிய இடங்களிலும் தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. இதற்கிடையே தமிழகத்தில் அக்டோபர் மாதம் தொடங்க உள்ள வட கிழக்கு பருவ மழைக்கான சாதகமான சூழல்களும் உருவாகியுள்ளது. கடல் பகுதியில் இருந்து தரைப் பகுதியை நோக்கி குளிர்ந்த கடல் காற்று வீசத் தொடங்கியுள்ளது. இதனால் வட கிழக்கு பருவமழை அக்டோபர் 20ம் தேதிக்கு முன்னதாகவே தொடங்கிவிடும்.

தற்போதைய சூழ்நிலையில், வளி மண்டல மேல் அடுக்கில் உருவான காற்று சுழற்சி தமிழக கடலோரப் பகுதியில் நிலை கொண்டுள்ளதால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட வட மாவட்டங்களில் கனமழை பெய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். இரவு நேரத்தில் கனமழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். நகரின் சில இடங்களில் கனமழை பெய்யும்.

## விவசாயிகளுக்கு ரூ.12,000 கோடி நிலுவை: சர்க்கரை ஏற்றுமதி அதிகரிக்க வருகிறது புது மானிய திட்டம்



புதுடெல்லி: நடப்பு ஆண்டுக்கான புதிய சர்க்கரை ஏற்றுமதி மானிய திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. நலிந்த நிலையில் உள்ள சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு நிலுவை தொகை வழங்க உதவும் வகையில், 2013-14ல் கச்சா சர்க்கரை ஏற்றுமதி செய்ய 4 மில்லியன் டன்னுக்கு ஏற்றுமதி மானியம் வழங்க முந்தைய மத்திய அரசு அறிவித்தது. 2014-15ல் இந்த திட்டத்தை நீட்டித்து 1.4 மில்லியன் டன் கச்சா சர்க்கரைக்கு ஏற்றுமதி மானியம் வழங்க தற்போதைய மத்திய அரசு உத்தரவிட்டது. இதன்படி ஒரு டன்னுக்கு ரூ.4,000 வரை மானியம் வழங்கப்படும். ஆனால், இரண்டு ஆண்டுகளிலும் அக்டோபர்-செப்டம்பர் சீசனில் சர்க்கரை ஆலைகள் மொத்தம் 1.15 மில்லியன் டன் சர்க்கரை மட்டுமே ஏற்றுமதி செய்திருந்தன.

இந்நிலையில் இந்த திட்டத்தை மேலும் தொடர உணவு அமைச்சகம்

விரும்பவில்லை. இதற்கு பதிலாக நடப்பு 2015-16 (அக்டோபர் - செப்டம்பர்) சீசனில் புதிய சர்க்கரை மானிய திட்டத்தை கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக உணவு அமைச்சக வட்டாரங்கள் கூறுகின்றன. முந்தைய திட்டம் பலனளிக்காததால்தான் சர்க்கரை ஆலைகள் குறைந்த அளவே ஏற்றுமதி செய்திருக்கின்றன. இதனால் தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக சர்க்கரை இருப்பு உபரியாக உள்ளது. அதாவது 2014-15 இறுதி நிலவரப்படி சுமார் 10.2 மில்லியன் டன் சர்க்கரை உபரி இருப்பாக உள்ளது. அரசு புள்ளிவிவரப்படி சர்க்கரை நிலுவை ரூ.21,000 கோடியாக இருந்தது, 2014-15 இறுதியில் ரூ.12,248 கோடியாக குறைந்துள்ளது. இறக்குமதி வரி அதிகரிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளால் இது சாத்தியமாகியுள்ளது எனவும், புதிய திட்டம் கரும்பு விவசாயிகளுக்கு விரைவில் நிலுவை வழங்க உதவும் எனவும் மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

நடப்பு ஆண்டின் இறுதியில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 28 மில்லியன் டன்னாக இருக்கும். கடந்த ஆண்டில் இது 28.3 மில்லியன் டன்னாக இருந்தது. அதுபோல் சர்க்கரை நுகர்வு கடந்த ஆண்டில் 24.5 மில்லியன் டன்னாக இருந்த நிலையில், நடப்பு ஆண்டில் 25.2 மில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

## ரூ.2 கோடி தேயிலை தூள் தேக்கம்



குன்னூர்: குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 40வது ஏலம் நடந்தது. மொத்தம் 12.90 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 9,14 லட்சம் கிலோவும். டஸ்ட் ரகம் 3.76 லட்சம் கிலோவும் அடங்கும். தரமான தேயிலை தூளை மட்டுமே கொள்முதல் செய்ததால் 20% தேயிலை தூள் தேக்கமடைந்தது.

இதன் மதிப்பு சுமார் ரூ.2 கோடி. இருப்பினும் அனைத்து ரகத்திற்கும் ஒரு கிலோவுக்கு ஒரு ரூபாய் வரை விலை உயர்ந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.38 முதல் ரூ.40, உயர் வகை ரூ.100 முதல் ரூ.120, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.50 முதல் ரூ.60 வரையிலும் உயர் வகை ரூ.110 முதல் ரூ.170 வரை விலை கிடைத்தது.

**அரசு கொள்முதலால் பருப்புகள் விலை உயர்வு**



விருதுநகர் : மத்திய, மாநில அரசுகளின் கொள்முதல் அறிவிப்பால் வெளி நாடுகளில் உளுந்தம் பருப்பு மூடைக்கு ரூ.500, பாசிப்பருப்பு ரூ.1,000, துவரம் பருப்பு ரூ.1,000, பாமாயில் (15 கிலோ) டின்னுக்கு ரூ.30 என விலை அதிகரித்துள்ளது. நிலக்கடலைப் பருப்பு மூடைக்கு ரூ.500ம், கடலை எண்ணெய் டின்னுக்கு ரூ.150ம் சரிந்துள்ளது. மத்திய அரசு பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்காக 1 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்ய முடிவெடுத்துள்ளது. இதையடுத்து மலேசியா, பர்மாவில் பருப்பு விலை உயர்ந்துள்ளது.

தமிழக அரசு ரேஷன் விநியோகத்திற்காக 1,800 லாரி உளுந்தம் பருப்பு, 4,500 லாரி துவரம் பருப்பு கொள்முதல் செய்ய டெண்டர் வெளியிட்டுள்ளது. இதனால் வெளிச்சந்தையில் துவரம் பருப்பு மற்றும் பாசிப்பருப்பு மூடைக்கு ஆயிரம் ரூபாயும், உளுந்தம் பருப்பு மூடைக்கு ரூ.500ம் உயர்ந்துள்ளது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு சரிவு மற்றும் கச்சா பாமாயில் விலை உயர்வால் பாமாயில் (15 கிலோ) டின் ரூ.810 (780) வரை விலை உயர்ந்துள்ளது. லாரிகள் வேலைநிறுத்தம் தொடர்ந்தால், உணவு பொருட்களின் விலைஉயரும் என வணிகர்கள் தெரிவித்தனர்.

**வேப்பூர் கிராமத்தில் பார்த்தீனியம் , கருவேல மரம் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி**

குன்னம், : பெரம்பலூர் மாவட்டம் குன்னம் அருகே உள்ள வேப்பூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பார்த்தீனியம் செடி மற்றும் கருவேல மரம் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. பெரம்பலூர் அருகே திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வல்லாபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் கல்லூரிஇறுதியாண்டு மாணவிகள் பிரியா, திவ்யா, பிரியதர்ஷினி, சசி,பிரியங்கா, பிரனதி, பொழிலரசி, வெங்கடேஷ்வரி, ராஜகுமாரி ஆகியோர் சார்பில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஆஸ்துமா, சொரியாஸிஸ் போன்ற நோய்கள் உண்டாவதற்கு பார்த்தீனியம் அரிப்பு செடி காரணமாக இருக்கிறது. புரோசோபிஸ் ஜீலிபரா என்றழைக்கப்படும் கருவேல மரத்தினால் நிலத்தடி நீர், ஆக்ஸிஜன் பற்றாக்குறை ஏற்பட்டு பொது மக்களின் வாழ்வாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே இந்தவித பாதிப்பை ஏற்படுத்தும் பார்த்தீனியம் செடிகள் மற்றும் கருவேல மரம் ஆகியவற்றை அடியோடு ஒழித்திட வேண்டும் என்று விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்த நிகழ்ச்சியில் ஒகளூர் கிராமத்தை சேர்ந்த ஏராளமான விவசாயிகள், பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## எண்ணெய் பாக்கெட் வாங்கும்போது ஏமாறாமல் இருப்பது எப்படி?



சமையல் எண்ணெய் பாக்கெட், பாட்டில் வாங்கும்போது நுகர்வோர் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று இந்திய நுகர்வோர் சங்கத் தலைவர் நிர்மலா தேசிகன் கூறியுள்ளார்.

தமிழகத்தில் உள்ள சில பிரபல எண்ணெய் தயாரிப்பு நிறுவனங்கள் பாமாயில், பருத்தி விதை எண்ணெய், தவிட்டு எண்ணெய் போன்றவற்றை ரீபைண்டு செய்து கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் என்ற பெயரில் கலப்படம் செய்து விற்பதாக இந்திய நுகர்வோர் சங்கம் (கன்ஸ்யூமர்ஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா) சமீபத்தில் தெரிவித்தது.

இந்த அமைப்பின் தலைவர் நிர்மலா தேசிகன், நுகர்வோர் விழிப்புடன் இருக்க வேண்டிய அவசியம் குறித்து ‘தி இந்து’விடம் பகிர்ந்துகொண்டார். அவர் கூறியதாவது:

ஒரு பொருளை வாங்கும்போது, பாக்கெட் மீது அச்சிடப்பட்டுள்ள விவரங்களை நன்கு படித்துப் பார்க்க வேண்டும். விலை, காலாவதியாகும் நாள், அக்மார்க் முத்திரை, உணவுப் பாதுகாப்புத் துறையின் முத்திரையுடன் கூடிய லைசென்ஸ் எண், எடையளவு, எண்ணெய்யில் உள்ள சத்துக்கள் பற்றிய தகவல்கள், ‘ஆர்ஜிமோன் எண்ணெய் கலப்படமில்லாதது’ என்றெல்லாம் அச்சிடப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும்.

பாக்கெட் உணவுப் பொருட்களைக் கண்காணிப்பதும், தவறு செய்யும் வணிகர் மீது உரிய நடவடிக்கை எடுப்பதும் தொழிலாளர் துறையின் கீழ் செயல்படும் எடையளவுச் சட்டப் பிரிவு, அக்மார்க் தர முத்திரை பிரிவு, உணவுப் பாதுகாப்புத் துறை ஆகிய 3 துறையினரின் கடமை. இத்துறைகளில் போதிய பணியாளர்கள் இல்லாததால் கடைகளுக்கு நேரில் சென்று மாதிரிகளை சோதனை செய்வது, தவறு செய்யும் வணிகர்கள் மீது நடவடிக்கை எடுப்பது போன்ற பணிகளை அவர்கள் முழுவீச்சில் மேற்கொள்வது இல்லை. இதை சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் சில வணிகர்கள், விதிமுறைகளை மீறி தங்கள் இஷ்டத்துக்கு உணவுப் பொருட்களை பாக்கெட் செய்து விற்கின்றனர்.

எடையளவுச் சட்டப்படி ஒரு லிட்டர், 500 மி.லி., 250 மி.லி. அளவுகளில் மட்டுமே எண்ணெய் விற்கவேண்டும். ஆனால் 850 மி.லி., 300 மி.லி. என்றெல்லாம் விற்கின்றனர் கொலஸ்ட் ரால் ஃப்ரீ, கொலஸ்ட்ரால் ஃபைட்டர் என விளம்பரம் செய்வதும், ரீபைண்டு ஆயில் என்பதோடு சூப்பர், அல்ட்ரா, மைக்ரோ என்கிற வார்த்தைகளை சேர்த்து விளம்பரம் செய்வதும் தவறு.

‘பிளெண்டட் எடிபிள் வெஜிடபிள் ஆயில்’ என்ற பெயரில் சமையல் எண்ணெய்களில் 20 சதவீதம் வரை பிற உணவு எண்ணெய்களை கலந்து விற்க அரசு அனுமதித்துள்ளது. என் னென்ன விகிதத்தில் என்னென்ன உணவு எண்ணெய்கள் சேர்க்கப் பட்டுள்ளன என்ற விவரத்தை பாக்கெட்டில் கட்டாயம் அச்சிட வேண்டும். மேலும், குறிப்பிட்ட ஒரு எண்ணெய் வித்தின் படத்தை மட்டுமே போட்டு விற்கக்கூடாது.

10 ஆண்டுகளுக்கு முன்பு ஆர்ஜிமோன் ஆயில் பயன்படுத்திய சிலர் ஆக்ராவில் இறந்தனர். அதன் பிறகு, உணவு எண்ணெய்யாக ஆர்ஜிமோன் ஆயிலை பயன்படுத்த அரசு தடை விதித்தது. ‘ஆர்ஜிமோன் ஆயில் இல்லை’ என எண்ணெய் பாக்கெட்களில் அச்சிடுவதும் கட்டாய மாக்கப்பட்டது. அவ்வாறு அச்சிடப் படாமல் தற்போதும் சில சமையல் எண்ணெய் பாக்கெட்கள் விற்கப்படுகின் றன. இதையும் நுகர்வோர்கள் கவனித்து வாங்க வேண்டும்.

ஆய்வில் நாங்கள் கண்டறிந்த மோசடி விவரங்களை எடையளவு துறை, அக்மார்க் பிரிவு, உணவுப் பாதுகாப்புத் துறையினருக்கு புகாராக அனுப்பியுள்ளோம். நுகர்வோர் நலன் கருதி இந்த பிரிவுகளில் கூடுதல் பணியாளர்களை அரசு நியமிக்க வேண்டும். இவ்வாறு நிர்மலா தேசிகன் கூறினார்._

**கலப்பட எண்ணெய் பற்றி சந்தேகமா?**

கலப்பட எண்ணெய் தொடர்பான கூடுதல் விவரங்கள், சந்தேகங்களுக்கு ‘கன்ஸ்யூமர்ஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா அமைப்பை 044-24494573, 24494577 ஆகிய தொலைபேசி எண்களில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10 மணியில் இருந்து மாலை 5.30 மணி வரை தொடர்பு கொள்ளலாம். caiindia1@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

## பிளாஸ்டிக் கழிவை கொண்டு_ 92 பேருந்து தட சாலைகளை அமைக்க மாநகராட்சி திட்டம்

சென்னையில் 92 பிளாஸ்டிக் பேருந்து தட சாலைகளை அமைக்க மாநகராட்சி முடிவு செய்துள்ளது. இதற்கான டெண்டர் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் நாளொன்றுக்கு சுமார் 5 ஆயிரம் டன் குப்பை உருவாகிறது. இதில் 7 சதவீதம் பிளாஸ்டிக் கழிவுகளாகும். குப்பையை அப்படியே குப்பைக் கிடங்குக்கு எடுத்துச்செல்லாமல் தவிர்ப்பதற்கு மாநகராட்சி பல் வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் நகரில் உருவாகும் பிளாஸ்டிக் கழிவு களை சாலைகளை அமைக்க பயன் படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னையின் முதன் முதலில் 2013-ம் ஆண்டில் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நெல்சன் மாணிக்கம் சாலை ஆகியவை பிளாஸ்டிக் கழிவை மூலப்பொருளாகக் கொண்டு போடப்பட்டன. சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் தூளாக் கப்பட்டு தார் கலவையுடன் 8 சதவீதம் அளவுக்கு கலந்து சாலை கள் போடப்படும். ஏற்கெனவே உள்ள தார் சாலைகளை 40 மி.மீ. ஆழத்துக்கு அகழ்ந்தெடுத்து அதன் மீது பிளாஸ்டிக் சாலைகள் போடப்படும். பிளாஸ்டிக் கழிவு களை தூளாக்கும் கருவிகள் சில இடங்களில் செயல்படாமல் இருந்ததால், பிளாஸ்டிக் சாலை போடும் பணிகளில் தொய்வு ஏற்பட்டது.

தற்போது ராயபுரம், தண்டை யார்பேட்டை, திரு.வி.க.நகர், அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், அடையார் ஆகிய மண்டலங்களில் 92 சாலைகளை பிளாஸ்டிக் சாலைகளாக மாற்றுவதற்கான டெண்டர் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2 ஆயிரத்து 126 உட்புறச் சாலைகள் போடவும் டெண்டர் அறிவிக்கப்பட்டுள்ளது.___

## எகிப்தில் இருந்து 18,000 டன் வெங்காயம் இறக்குமதி

இந்தியாவில் வெங்காயத்தின் விலை சராசரியாக கிலோ 60 ரூபாய் என்ற அளவிலே தொடர்ந்து விற்பனையாகி வருகிறது. இதனால் வெங்காயத்தின் விலையைக் குறைப்பதற்காக கடந்த இரு மாதங்களில் 18,000 டன் அளவுக்கு எகிப்தில் இருந்து இந்தியாவுக்கு வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக எகிப்தில் இருந்து இந்தியாவுக்கு வந்திருக்கும் சிகப்பு நிறத்திலான வெங்காயங்கள் இந்திய சந்தையில் விற்பனையாகி வருகிறது. ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் 18,000 டன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதே அளவு வெங்காயம் இந்தியாவுக்கு வர காத்திருக்கிறது. கடந்த நிதி ஆண்டில் 567 டன் அளவுக்கு மட்டுமே எகிப்திலிருந்து வெங்காயம் இந்தியாவுக்கு வந்தது. ஆனால் இந்த நிதி ஆண்டில் சுமார் 35,000 டன் வரை இறக்குமதி செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெங்காயம் உற்பத்தியாகும் மாநிலங்களில் மழை அளவு அதிக மாக இருந்ததன் காரணமாக பயிர் கள் சேதம் அடைந்தன. தவிர வெங் காய விற்பனையாளர்களும் பதுக்கி வைத்ததால் வெங்காயத்தின் விலை அதிகரித்தது. எகிப்து மட்டு மல்லாமல் ஆப்கானிஸ்தானில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்படுகிறது. எகிப்தில் இருந்து ஆரஞ்சு பழங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன.